Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

ஏடு:15 வள்ளுவர்ஆண்டு2030கார்த்திகை26ஞாயிற்றுக்கிழமை (12-12-1999)UTHAYAN ALively National Tamil Daily கதிர்:13

# வெற்றிலைக்கேணிப் பிரதேசத்தில் நேற்று பெரும் சண்டை மூண்டது!

## அதிகாலை முதல் மோதல்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 12

ஆனையிறவுக்குக் கிழக்கே கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்று அதிகாலை முதல் விடுதலைப் புலிகளுக்கும்இராணுவத்துக்கும் இடையில் பெரும் சமர் இடம்பெற்று வருகின்றது.

நேற்று அதிகாலை 2-20 மணிக்கு பெரும் எண்ணிக்கையான புலிகள் கட்டைக்காட்டில் உள்ள இராணுவத்தின் முன்னரங்க நிலைகள் மீது பெருத்த பாய்ச்சலுடன் தாக்குதல் ஒன்றை ஆரம்பித்ததை அடுத்துச் சமர் வெடித்தது.

நேற்றிரவு வரை மூன்று கட்டங்களாகப் புலிகள் தாக்குதல் நடத்தியதாகவும் —

இரு தரப்பும் உக்கிரமாக மோதி வருவதாகவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

வன்னியின் தென்பகுதியில் நிலமீட்புக்காக மேற்கொள்

([12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்களுக்குப் புலிகள் தொடர்ந்து அறிவித்தல்

யாழ்ப்பாணம், டிசெ 12

யாழ். குடாநாட்டின் கரையோரப் பகுதியிலும் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதியிலும்இராணுவ முகாம்கள், ஆட்லறித் தளங்கள் மற்றும் காவல் நிலைகள் போன்றவற்றுக்கு அருகில் வசிக்கும் மக்களை அங்கிருந்து விலகிச் செல்லுமாறு 'புலிகளின் குரல்' வானொலியில் நேற்று நண்பகல் முதல் தொடர்ச்சியாக அறிவித்தல் விடுக்கப்பட்டு வருகிறது.

குடாக்கடலேரியை அண்டிய சில கரையோரப் பிரதேசங்களின் பெயர்களும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலியிலிருந்து விழுந்து பலி!

வவுனியா, டிசெ. 12

வன்னிப் போர் முனையில் காயமடைந்த சிப்பாய்களை ஏற்றிச் சென்ற ஹெலிகொப்டரிலிருந்து சிப்பாய் ஒருவர் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

வவுனியா பூந்தோட்டம் பகுதியிலே இந்தச் சிப்பாய் விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-5]

## மருத்துவ மாணவர்கள் நாளை மறியல் போர்

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்கள் நாளை திங்கட்கிழமை காலை 8-30 மணி முதல் பல்கலைக்கழக முன்றலில் மறியல் போராட்டம் ஒன்றை நடத்த உள்ளனர்.

மருத்துவபீடத்தில் நிலவும் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் பற்றாக்குறை, உடலமைப்பியல் துறையில் நிலவும் வசதியீனங்கள் என்பனவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவும் —

[12ஆம் பக்கம் பார்க்க]

## மன்னாரில் 13 மீனவர் கைது

வவுனியா, டிசெ. 12

மன்னார் கடற் பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற 13 கடற்றொழிலாளர்கள் படையினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்

[12 ஆம் பக்கம் பார்க்க]

## தபால் மூல வாக்களிப்பு குடாநாட்டில் 90 வீதம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

குடாநாட்டில் தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்த 958 பேரில் நேற்று முன்தினம் வரை 90 சதவீதமானவர் வாக்களித்தனர் என யாழ். தேர்தல் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

தபால் மூல வாக்களிப்பு கடந்த 7 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றதென்றும் —

இதுவரை வாக்களிக்காதவர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதி 4 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பலாம் என்றும் —

யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார். (உ-3-5-10)

## ரணிலின் கூட்டம் திருமலையில் புதனன்று

திருகோணமலை டிசெ. 12

திருகோணமலையில் ஐ. தே. கவின் தேர்தல் பிரசாரக் கூட்டம் எதிர்வரும்15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

திருகோணமலை மக்கெய்ஸர் விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் ஐ. தே. க. தலைவரும் ஜனாதிபதிவேட்பாளருமான ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார். (உ-5)

## தனங்கிளப்பு மீது ஷெல் தாக்குதல்!

யாழ்பாணம், டிசெ. 12

நேற்று முன்னிரவு பூநகரிப் பக்கத்திலிருந்து விடுதலைப் புலிகள் ஏவியதாகக் கருதப்படும் ஷெல்கள் தனங்கிளப்பு கரையோரப் பகுதிகளில்வந்து விழுந்து வெடித்ததாக சில இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனால் ஏற்பட்ட சேதங்கள் பற்றிய விவரங்கள் இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

இத்தாக்குதலில் பொதுமக்களுக்கும் சேதம் ஏற்பட்டதாக ஒரு தகவல் தெரிவித்த போதும் அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

பூநகரி ஊடாக முன்னேறி குடாநாட்டின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றுவது புலிகளின் நோக்கமாக இருக்கக்கூடும் எனக்கருதப்பட்டது.

[12 ஆம் பக்கம் பார்க்க]

## கண்டாவளைப் பகுதியில் ஷெல்லுக்கு மூவர் பலி!

### மற்றும் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

ஆனையிறவு, பரந்தன் பகுதியில் இருந்து நேற்று அதிகாலை தொடக்கம் இடம்பெற்றுவரும் ஷெல் தாக்குதல்களினால் கண்டாவளை, கரிகாலன் குடியிருப்பு ஆகிய இடங்களில் வசித்த மூன்று பொதுமக்கள் உடல் சிதறிப் பலியானார்கள்; மேலும் இருவர் படுகாயமடைந்தனர். பல வீடுகளும் சேதமடைந்தன.

கண்டாவளையைச் சேர்ந்த கறுப்பையா காளிமுத்து [வயது 59], கரிகாலன் குடியிருப்பு றெட்பானாவைச் சேர்ந்த ஆறுமுகம் அரசம்மா, சண்முகராசா சந்திரா ஆகியோரே இந்த ஷெல் தாக்குதலில் உடல் சிதறிப் பலியானார்கள்.

காளிமுத்து யோகேஸ்வரி (வயது 17), சந்திரமோகன் தவமணி (வயது 39] ஆகியோர் காயமடைந்தனர்.

## கட்டுநாயக்காவில் பெரு விபத்து தவிர்ப்பு

கொழும்பு, டிசெ, 12

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நேற்று இரண்டு விமானங்கள் நேருக்கு நேர் மோதி ஏற்பட இருந்த விபத்து கடைசி நிமிடத்தில் தவிர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விமான நிலைய ஓடு பாதையில் தாய்லாந்து விமானம் ஒன்று தரை இறங்க முற்பட்டது என்றும்—

அந்த நேரத்தில் அதே ஓடு பாதையில் ஒரு ரஷ்ய விமானம் ஓட ஆரம்பித்திருந்தது என்றும் கூறப்பட்டது.

இரு விமானங்களும் நேருக்கு நேர் மோதிக்கொள்ள இருந்த தருணத்தின் கடைசி நிமிடத்தில் கட்டுப்பாட்டு அறை

(12 ஆம் பக்கம் பார்க்க]

## தேர்தல் அதிகாரிகளுக்கு பயிற்சி வகுப்புக்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 12

ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்களில் தேர்தல் கடமைகளில் ஈடுபடவுள்ள உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் பயிற்சிவகுப்பு ஒன்று யாழ். செயலகத்தில் நேற்று ஆரம்பமாகியது.

யாழ். தேர்தல் அதிகாரியால் நடத்தப்படும் இந்தப் பயிற்சி வகுப்பில் சுமார் ஆயிரத்து 150 சிரேஷ்ட தலைமை தாங்கும் அதிகாரிகள் மற்றும் கனிஷ்ட தலைமை தாங்கும் அதிகாரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

இதேவேளை—

உதவி தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கான பயிற்சிகள் நாளை திங்கட்கிழமை யாழ். தெரிவத்தாட்சி அலுவலரால் நடத்தப்படவுள்ளதாக யாழ். தேர்தல்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. [உ-9-8]

## கண்ணிவெடி பயன்படுத்துவதை கைவிடக் கோருகிறது எம். எஸ். எவ்.

கொழும்பு, டிசெ. 12

இலங்கையில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் படையினரும் விடுதலைப் புலிகளும் நிலக்கண்ணி வெடிகளைப் பயன்படுத்தக்கூடாது என்று பிரான்ஸ் மருத்துவக் குழு (எம். எஸ். எவ்) கோரி உள்ளது.

வட இலங்கை உட்பட போரினால் பாதிக்கப்பட்ட பல இடங்களில் மருத்துவ சேவையில் ஈடுபட்டிருக்கும் அந்த அமைப்பு வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:—

வடக்கு — கிழக்கு பிரதேசத்தில் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் சரமாரியான ஆட்லறி மற்றும் விமானத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இத்தகைய தாக்குதல்களில் சிக்கி பல பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர்.

கண்ணிவெடிகள் மற்றும், மிதிவெடிகள் என்பன பொதுமக்களுக்கு கடும் சேதத்தை ஏற்படுத்தி வருகின்றன. எனவே அவற்றைப்பயன்படுத்துவதை இருதரப்பும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கான பாதை ஒன்றை திறப்

[12 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தரும் கணக்காளருமான திருமதி க இந்திராணி அவர்களின் அன்புக் கணவர்

## தில்லைநாதன் கதிர்காமநாதன்

(நூலகர், யாழ். இந்துக் கல்லூரி)

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் கவலையையும் தெரிவிப்பதோடு அன்னாரது ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பரேஸ்வர பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
காரைநகர் ப. நோ. கூ. சங்கம்
காரைநகர்.

(சி110/86)

# மரண அறிவித்தல்கள்

## வேலாயுதர் சண்முகம்

இருபாலையைப் பிறப்பிடமாகவும் பன்னாலை தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதர் சண்முகம் கொழும்பில் இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பன்னாலை மெத்த வீடு திரு. திருமதி அப்பாசுவாமி (சட்டத்தரணி) அவர்களின் மருமகனும், காலஞ்சென்ற சோமசுந்தர நாயகியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகராஜேஸ்வரி, திருவாதவூரன், அமிர்தயோகம், தில்லைநடராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற குணரத்தினம், முத்துக்குமாரசாமி, இராஜநாயகி, ரஞ்சிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், லலித்ரூபன் யதீஸ்ரூபன், கோகுலரூபன், நிஷாந்தினி, வினோதினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 12-12-99 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியவில் கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:-
திரு. திருமதி அ. முத்துக்குமாரசுவாமி

டச்றோட்,
உடுவில்.

[71639]

## சின்னத்தம்பி தம்பிஐயா

சுதுமலை கிழக்கு மானிப்பாயைச் சேர்ந்த சின்னத்தம்பி தம்பிஐயா 11—12—99நேற்றுக் காலமானார்.

அன்னார் அழகம்மாவின் அன்புக்கணவரும், Dr. அருமைத்துரை [வைத்திய அதிகாரி நவாலி அரசினர் வைத்தியசாலை], இராஜலட்சுமி, சின்னத்தம்பி. அன்னலட்சுமி, சிவபாலன், சந்திரபாலன், [ஜேர்மனி] ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மாவதி, சுந்தரலிங்கம் [ப நோ கூ. சங்கம்—சுன்னாகம்] நீலாம்பிகை, பத்மநாதன், சிவகாமி, மங்களேஸ்வரி [ஜேர்மனி] ஆகியோரின் அன்பு மாமனாரும், அரிஹரன், யதீஸ்குமார் [இறுதி வருட வர்த்தக முகாமைத்துவபீடம், யாழ். பல்கலைக்கழகம்.], யாழினி, இரதாயினி, பார்த்தீபன், கஜானனன், சானுஜன், சாதுசான் ஆகியோரின் அருமைப் பேரனும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம், நாகராசா, சின்னத்துரை மற்றும் சுப்பிரமணியம் [இளைப்பாறிய ஆசிரியர்]. நல்லம்மா [இளைப்பாறிய ஆசிரியை], ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 11-12-99 நேற்று 1 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகள் தாவடி இந்து மயானத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
Dr. அருமைத்துரை
[மகன்]

சுதுமலை கிழக்கு,
மானிப்பாய்.

[சி/10188]

## யோசப் யோன்ஸ்ரன்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட யோசப் யோன்ஸ்ரன் 07 - 12 - 99 அன்று பிரான்சில் காலமானார்.

இவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான யோசப் மாகிறட் தம்பதியரின் மகனும், கரவெட்டியைச் சேர்ந்த M. B நீக்கலஸ் (ஓய்வு பெற்ற தபாலதிபர்), தம்பதிகளின் அன்பு மருமகனும், நீற்றா செல்வராணி (பிரான்ஸ்), யின் அன்புக் கணவரும், ஜெசிக்காவின் [பிரான்ஸ்], அன்பு தகப்பனாரும், சேவியர், தேவராஜா, ஜறின்வின்சன், மைக்கல், பௌலின் தோமஸ், ரதி இருதயராஜா, வோல்ட்டன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வரஞ்சினி யோகநாதன், ஜெயராணி [யசி] ஜெயராஜா, அனற், மெலோஞானசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், திரு. திருமதி ஜஸ்ரினின் (பிரான்ஸ்) அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை [13 - 12 - 99) திங்கட்கிழமை மாலை 3-30 மணிக்கு பிரான்சிலுள்ள அவரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M. B. நீக்கலஸ்

கன்பொல்லை வீதி,
கரவெட்டி.

[71717]

## கிராம அலுவலர்கள் இடமாற்றம்

தென்மராட்சி, டிசெ.12

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் பணியாற்றும் கிராம அலுவலர்களுக்கான உள்ளக இடமாற்றம் பிரதேச செயலர் பு. சுந்தரம் பிள்ளையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நுணாவில் கிழக்குப் பிரிவு கிராம அலுவலராக கடமையாற்றிய வை. துரைலிங்கம் நுணாவில் மேற்குப் பிரிவுக்கும் —

நுணாவில் மேற்குப் பிரிவில் கடமையாற்றிய வீ குமாரசாமி மண்டுவில் பிரிவுக்கும்—

மண்டுவில் பிரிவில் கடமையாற்றிய திருமதி எஸ். பாலசுப்பிரமணியம் நுணாவில் கிழக்குப் பிரிவுக்கும் —

இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-117)

## வீதி திருத்த நிதி உதவி

சண்டிலிப்பாய், டிசெ. 12

வலி. வடக்கு பிரதேச சபை பிரிவில் உள்ள கட்டுவன் புலம் பாடசாலை வீதியை முன்னுரிமை கொடுத்து திருத்துவது என்று பிரதேசசபை நிர்வாகம் தீர்மானித்துள்ளது.

அண்மையில் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சிதிணைகளத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட விசேட நிதியான மூன்று லட்சம் ரூபாவை இவ் வீதிப் புனரமைப்புக்கெனப் பயன் படுத்துவதென்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

[ஐ-135]


ரீகல் (ஸ்ரான்லி வீதி,)
ரீகல் டாக்கீஸ்
(ஈச்சமோட்டை)
பிரபுவின்—
திருப்பதி ஏழுமலை வெங்கடேசா
10-30, 2-30
நேரடி C D யில் காட்சிகள்
(71736)

நாகம்ஸ்
சுன்னாகம்
ரஜனி, ரோஜா
நடித்த
உழைப்பாளி
காட்சிகள்:
11-00, 2-30, 5 15
(புதிய நேரம்)
(71727)

ராஜா
யாழ்ப்பாணம்
விஜய் - ஷாலினி
மற்றும் பலர் நடித்த
காதலுக்கு மரியாதை
10-00, 2-00, 5.00
(சி/10119)

லிபேட்டி அச்சுவேலி
இன்று முதல்
முரளி — மீனா
நடித்த
வாட்டாகுடி இரணியன்
காட்சிகள்: 10-30, 2 30
[illegible]
(71687)


# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சுப்பிரமணியம்

(ஆசாரியார்)

உடுவிலைப் பிறப்பிடமாவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சுப்பிரமணியம் (ஆசாரியார்) 11—12—99 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் செல்லத்துரை, காலஞ்சென்ற நடராசா, முத்தையா, திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் கந்தசாமி, கனகேஸ்வரி, கிருபாசக்தி, கமலேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகரத்தினம், குகதாசன் (பஹறேன்), இராஜலிங்கம் (டென்மார்க்), காலஞ்சென்ற நவமலர், மங்களேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் மதுரா, ராகுலன், திருச்செந்தூரன், திருமாலினி, துவாரகா, சோபிகா, திருமகள், மயூரன், கோவர்த்தனன், மாதவன், கலைமகள், கௌதமன், சஞ்சீவன், மீரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
சு. கந்தசாமி
(மகன்)

காளிகோயிலடி,
உடுவில்.

(71729)

## சின்னத்தம்பி இராசலிங்கம்

(பூச்சி - ரிங்கர்)

யாழ் கலட்டியைப் பிறப்பிடமாகவும் ஆறுகால் மடத்தை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி இராசலிங்கம் (10 - 12 - 99) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி இராசம்மா அவர்களின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை, முத்துப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் சிவமணியின் அன்புக் கணவரும் உமாவதி (பிரான்ஸ்), சுகந்தன் ((பிரான்ஸ்). ஜெகந்தன் (லண்டன்), எழில்மதி, மயூமதி ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வராசா (பிரான்ஸ்) வின் அன்பு மாமனாரும், மகாலிங்கம், பரமேஸ்வரி, தர்மலிங்கம் (டோகா), சுந்தரலிங்கம், பஞ்சலிங்கம், சந்திரலிங்கம் ஜெர்மனி), யோகலிங்கம் ஆகியோரது அன்புச் சகோதரனும் கந்தையா, காலஞ்சென்ற சோமு, பூமணி, பரமேஸ்வரி, திரவியம் மற்றும் துரைரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் 12 - 12 - 99 ஞாயிறு பிற்பகல் 2 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

பாடசாலை வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.

(71734)

## நாகேசு தம்பிமுத்து

(முன்னாள் ரவர் கோப்பி பார் உரிமையாளர்)

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் யாழ்பாடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட நாகேசு தம்பிமுத்து நேற்று 11 — 12 — 99 சனிக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

இவர் நேசம்மாவின் அன்புக் கணவரும் வைத்திய நிபுணர் இராஜகுலேந்திரன் (லண்டன்), மகேந்திரராஜா (ரவர் கோப்பி பார்), சாந்தமலர், சற்குணராஜா (பொறியியலாளர் - லண்டன்), அற்புதராஜா (லண்டன்), சறோமலர், கருணமலர் (லண்டன்), பாலராஜா (லண்டன்), ரவிராஜா (பொறியியலாளர் -லண்டன்) ஆகியோரின் தகப்பனாரும், சோபனா (லண்டன்), ஜெயரட்ணம் (இலங்கை வங்கி), வசந்தா, சாந்தினி (லண்டன்), பிரேமினி (லண்டன்), சுந்தரலிங்கம்,ரவிசேகரா (லண்டன்),சிவாந்தினி (லண்டன்), தர்ஷனி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஒக்ஸ்போர்ட் லண்டன் மருத்துவக் கல்லூரி மாணவர்களான சஞ்சீவ், கார்த்திக மற்றும் ஜெயறமணன், ஜெயகோபி, கோகுலன். இந்துஜா, பிரதீப், கார்த்திகா, கிருஷாந்தி கர்ஷினி, நிஷாந், பிரசாந், மற்றும் லண்டனில் வசிக்கும் அர்ச்சனா, லக்ஷணா, அவிநாஷ், நிலீப், தக்ஷி, ஆனந், வினோத் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற இரத்தினம், சிவகுரு, சரஸ்வதி, சின்னராசா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற மார்க்கண்டு, தங்கச்சியம்மா, தங்கராசா மற்றும் திலகவதி ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற N. T, செல்லத்துரை (முன்னாள் யாழ் மேயர்), சி. ஆறுமுகம், க. திரவியம், புஸ்பராணி, அன்னபூரணம் ஆகியோரின் சகலனும் கனகம்மா, பூமணி, காலஞ்சென்ற சிவயோகம், பொன்னுத்துரை, விஜயரட்ணம் ஆகியோரின் மைத்துனருமாவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (12-12-99) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 00 மணிக்கு 82/3, யாழ்பாடி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தம்பிமுத்து மகேந்திரராஜா
(ரவர் கோப்பி பார் உரிமையாளர்)

82/3, யாழ்பாடி வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/10189)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## சந்தேகங்களில் நியாயம் உண்டு

வடக்கு — கிழக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களுக்கு, இடம் பெயர்ந்தோர் நலன்களைக் கவனிக்கவென இராணுவம், கடற்படை, பொலிஸ் படைகளைச் சேர்ந்த அதிகாரிகள் சிவில் இணைப்பதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

போர் காரணமாக இடம் பெயர்ந்தோரின் நலன்களைக் கவனிக்கவே, அவர்களுக்கு அவ்வப்போது தேவைப்படும் உதவிகளைச் செய்வதற்காகவே இந்த விசேட நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டதாக அரசாங்கத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த நியமனங்கள் குறித்து இரண்டு சந்தேகங்கள் எழுப்பப்படுகின்றன. இந்தப் பணிகளைச் செய்வதில் ஏற்கனவே பல சிவில் உயர் அதிகாரிகள் அரசினால் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அவ்வாறிருக்க படை அதிகாரிகளிடம் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருப்பது தமிழ்ப் பிரதேசத்தை தொடர்ந்து போர்ப் பூமியாக வைத்திருக்கும் நோக்கத்தைக் கொண்டது எனத் தமிழ்க் கட்சிகள் சந்தேகம் எழுப்பியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தல் நெருங்கும் வேளையில் சிவில் நிர்வாகத்தில் இராணுவ அதிகாரிகளை இணைத்திருப்பது தேர்தல் மோசடிகளில் ஈடுபட வழி வகுக்கும் நோக்கம் கொண்டதே என்பது இரண்டாவது சந்தேகமாகும்.

சிவில்நிர்வாக அதிகாரிகளின் பணிகள் மீது இராணுவ அதிகாரிகள் கைவைக்கத் தொடங்கும் போது, உண்மையான சிவில் நிர்வாகம் நடைபெறும் வாய்ப்புக் குறைந்து போகும். சிவில் நிர்வாகம் என்ற பெயரில் அனேகமாக இராணுவ நிர்வாகமே நடைபெறும்.

அது மட்டுமன்றி இராணுவ நலன்களை முன்னிறுத்திச் சிவில் நிர்வாகம் நடத்தப்படும் சாத்தியமும் அதிகம் உண்டு.

வவுனியாவில் கடந்த மாதம் தமது குடியிருப்புகளை விட்டுத் தூரப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்த மக்களுக்கு உணவுப் பொருள் நிவாரணம் வழங்க சிவில் அதிகாரிகள் ஏற்பாடு செய்ததும்—

இறுதி நேரத்தில் பாதுகாப்பு அதிகாரிகள் அதனைத் தடுத்து நிறுத்தியதும்— இதற்கு நல்ல உதாரணம்.

இடம் பெயர்வுகள் இனியும் உண்டாகும் என்ற எதிர்பார்ப்புடன் இந்தநியமனங்கள் செய்யப்பட்டிருப்பின், தமிழ்ப் பிரதேசங்களைத் தொடர்ந்தும் போர்ப் பூமியாக வைத்திருப்பதே நோக்கமெனக் கொள்ளலாம்.

தேர்தல் வேளையில் இராணுவ அதிகாரிகளிடம் சிவில் நிர்வாகப் பொறுப்புக்களை வழங்குவது இயல்பாகவே சந்தேகத்தைக் கொடுக்கும். இடம் பெயர்ந்தோருக்கான பணி என்ற போர்வையில் தேர்தல் பணிகளில் இராணுவ அதிகாரிகள் தலையிடக்கூடிய வாய்ப்பு உண்டு என எதிர்க்கட்சியினர் கூறுவதில் நியாயம் இல்லாமல் இல்லை.

தேர்தல் வேளையில் வடக்கு-கிழக்கில் இராணுவ அதிகாரிகளிடம் சிவில நிர்வாக வேலைகள் ஒப்படைக்கப்பட்டிருப்பது, தேர்தலிலும் அரசுபோர் அணுகுமுறையைக் கையாளுவதற்கே என்று எதிரணி எம். பியான ரவி கருணாநாயக்க கூறியிருப்பதும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டிய ஒன்றே.

மொத்தத்தில் இராணுவ இணைப்பதிகாரிகளின் நியமனம் உள்நோக்கம் கொண்டது எனச் சந்தேகங்கள் எழுவதில் நியாயம் உண்டு.

# பாடசாலைக்கட்டட வேலைகள் பற்றி சரியான பதிவுகள் பேணப்படவில்லை

## கணக்காய்வு மூலம் கண்டுபிடிப்பு

வலிகாமம் தெற்கு, டிசெ. 12

அண்மைக்கால கணக்காய்வுகளின் போது பல பாடசாலைகளில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கட்டட வேலை மற்றும் திருத்த வேலைகளுக்கான நிதி ஒதுக்கு கணக்குப் பதிவுகளும் பற்றுச் சீட்டுக்களும் சரிவரப் பேணப்படவில்லை என முறைப்பாடுகள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

1999 ஆம் ஆண்டில் பல பாடசாலைகளில் கட்டட வேலைகள்பல்வேறு அமைப்புகளின் நிதி ஒதுக்கீடுகளின் கீழ் நடைபெற்றுள்ளன.

சம்பந்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளின் வேலைகளுக்கான முழு விவரங்களும் பதிவேட்டு புத்தகங்களில் பதியப்பட்டு பற்றுச்சீட்டுக்களும் சரியான முறையில் பேணப்பட வேண்டும்.

கல்வித்திணைக்களம் மேற்கொண்ட கணக்காய்வுகளின் படி பல பாடசாலைகளில் இவை சரியான முறையில் பேணப்படாதிருப்பதாக வலயக்கல்விப் பணிப்பாளர்களின் கவனத்திற்கு கொண்டு வரப் பட்டுள்ளது.

பதிவேட்டுப் புத்தகங்களையும் பற்றுச்சீட்டுக்களையும் உரியமுறையில் பேணுமாறும், ஒப்பந்த காரர்களாகிய பாடசாலை அபிவிருத்திச் சபையினர் இதில் கூடிய அக்கறை கொள்ள வேண்டும் எனவும் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் வீ இராசையா அறிவித்துள்ளார். (ஐ-152)

## பளை தர்மக்கேணிப் பகுதியில்

# யூரியா உரம் எடுத்துச் செல்ல விவசாயிகளுக்கு அனுமதிமறுப்பு

தென்மராட்சி. டிசெ. 12

பளை தர்மக்கேணி சோதனைத்தடை முகாமுக்கு அப்பால் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுள் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் காலபோக நெற்செய்கை மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கை ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் தர்மக்கேணி சோதனைச் சாவடியூடாக யூரியா உரம் கொண்டு செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதனால் ரி. டி. எம். உரத்தினையே தொடர்ந்து பயிர்களுக்கு பயன்படுத்த வேண்டியுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இங்குள்ள ஏனைய பகுதிகளில் விவசாயிகள் புலோப்பளை படை அதிகாரியின் சிபார்சுடன் யூரியா உரத்தினைப் பெற்று பயிர்களுக்குப் பயன்படுத்துகின்றன. (ஐ-117)

## அச்சுவேலி, பருத்தித்துறை ஆஸ்பத்திரிகள்:

# வைத்திய அதிகாரிகள் தங்க விரைவில் புதிய விடுதிகள்

வலி கிழக்கு. டிசெ. 12

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலையிலும், பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையிலும், வைத்திய அதிகாரிகள் தங்கும் விடுதிகள் பல லட்சம் ரூபா செலவில் சுகாதாரத் திணைக்களத்தினால் அமைக்கப்படவுள்ளன—

பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் வைத்தியர்கள் தங்கும் விடுதிகள் சுமார் 30 லட்சம் ரூபா செலவிலும்—

அச்சுவேலி அரசினர் வைத்திய சாலையில் வைத்திய அதிகாரி தங்கும் விடுதி 20 லட்சம் ரூபா செலவிலும் அமைக்கப்படும்—

இதற்கான பூர்வாங்க வேலைகளை சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது. விரைவில் இக்கட்டடங்களுக்குரிய அடிக்கற்கள் நடப்படவுள்ளதாக சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன—

இதேவேளை வடமராட்சி கிழக்கு மருதங்கேணி அரசினர் வைத்தியசாலையிலும் வைத்திய அதிகாரி தங்குமிடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது. அதன் முதற் கட்ட வேலைகள் பூர்த்தியாகும் தறுவாயில் உள்ளதாகவும் — அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

குடாநாட்டில் உள்ள ஆஸ்பத்திரிகளில் தென்பகுதி டாக்டர்கள் வந்து கடமை புரிவதால் தங்குமிட வசதியின்மை பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகின்றது. (ஐ-180)

# நான்கு ஆஸ்பத்திரிகளில் அம்புலன்ஸ் தரிப்பிடங்கள்

## 15 லட்சம் ரூபா செலவில் அமைப்பு

வலி. கிழக்கு, டிசெ. 12

யாழ். மாவட்டத்தில் உள்ள நான்கு ஆஸ்பத்திரிகளுக்கு 15 லட்சம் ரூபா செலவில் அம்புலன்ஸ் தரிப்பிடங்கள் சுகாதாரத் திணைக்களத்தினால் அமைக்கப்பட்டு வருகின்றன.

பளை, காரைநகர், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களில் உள்ள நான்கு வைத்திய சாலைகளிலேயே அம்புலன்ஸ் தரிப்பிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

தரிப்பிடங்கள் ஒவ்வொன்றும் 4 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வருவதாகவும்—

இம்மாத இறுதிக்குள் இக் கட்டடவேலைகள் முடிவுறும் எனவும் —

சுகாதாரத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஆஸ்பத்திரிகளுக்கு அண்மையில் புதிதாக அம்புலன்ஸ் வண்டிகள் வழங்கப் பட்டமை தெரிந்ததே. (ஐ-180)

## நாளை

கார்த்திகை 27

திங்கட்கிழமை

திதி: பஞ்சமி நண்பகல் 12.59 வரை

நட்சத்திரம்: திருவோணம் காலை 6.22 வரை.

விநாயக ஷஷ்டி விரதம்

சுபநேரம்: 12.20 - 1.50

ராகுகாலம்: 7.50 - 9.20

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

சாந்தியில் தான் அழகின் நிறைவுத் தன்மை இருக்கின்றது; பகைமையில் அல்ல.

கவி தாகூர்.

## மாதாந்த உதவிப் பணம்

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் நவம்பர் மாதத்திற்கான, பொது சன மாதாந்த உதவிப்பணம் நாளை தொடக்கம், அவ்வப் பகுதி தபால் நிலையங்கள் மூலம் வழங்கப்படும் என சமூக சேவை உத்தியோகத்தர் என். தருமலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-109)

## வீதி திருத்தம்

அராலி இலுவனை வீதி தற்போது திருத்தப்பட்டு வருகின்றது. இந்த வீதியைத் திருத்தவென ஆறு மாதங்களுக்கு முன் கற்கள் பறிக்கப்பட்டபோதிலும் வீதி திருத்தப்படவில்லை-என இப்பகுதிமக்கள் வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனிடம் முறையிட்டிருந்தனர். பிரதேச சபைத் தலைவரின் தலையீட்டினைத்தொடர்ந்து இந்த வீதி தற்போது திருத்தப்பட்டுவருகின்றது.

## ஆண்டு விழா

யாழ் மாவட்ட விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 9.30 மணிக்கு திணைக்கள மண்டபத்தில் மாவட்ட விலை மதிப்பீட்டாளர் பி பாலேந்திரன் தலைமையில் நடைபெற உள்ளது.

பிரதமவிருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் கலந்து கொள்வார்.

திணைக்களத்தில் இருந்து ஒய்வுபெற்ற ஊழியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் விழாவில் இடம்பெறும். [ஐ 180]

## மாணவி திரும்பினார்

யாழ்ப்பாணம், டிசெ. 12

கோப்பாய் வடக்கில் கடந்த 4 ஆம் திகதி தொடக்கம் காணாமற் போய்விட்டதாக தெரிவிக்கப்பட்ட மாணவி வீட்டுக்குத் திரும்பிவிட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்திற்கு உறவினர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்த பரமலிங்கம் மோகனவரசி [14] என்ற மாணவியே சாவகச்சேரியில் உள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்து விட்டு வீடுதிரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது (ஐ-10)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு

நெல்லியடி, டிசெ. 12

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள சுட்டிபுரம், கறுக்காய் பகுதிகளில் கடந்த வாரம் சுமார் 35 கட்டாக்காலி நாய்கள் வரணிப் பகுதி பொது சுகாதார பரிசோதகரினால் நஞ்சு வைத்து அழிக்கப்பட்டன. [ஐ-109]

# சமய சந்திதிகளில்

வலிகாமம் தெற்கு, டிசெ. 12

யாழ்ப்பாணம் கந்தர்மடம் பழம் வீதி ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயத்தில் தற்போது நடைபெற்று வரும் விநாயகர் விரத (பெருங்கதை)பூர்த்தி நாளை திங்கட்கிழமை இடம்பெற உள்ளது.

தினமும் ருத்ரகும்ப அபிஷேகம், பூசை, பஞ்சமுக அர்ச்சனை, விநாயகபுராண படிப்பு என்பன நடைபெற்று வருகின்றன.

நாளை திங்கட்கிழமை காலை சங்காபிஷேகம், கணபதிஹோமம், பூசை ஆகியன நடைபெற்று மாலை 4 மணிக்கு வசந்தமண்டப பூசையை தொடர்ந்து விநாயகப் பெருமான் வெளி வீதி உலா வந்து அருள்பாலிப்பார் (ஐ-152)

★ ★ ★

திருநெல்வேலி, டிசெ 12

இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை பிள்ளையார் பெருங்கதை நிறைவு தின விசேட பூசை, அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு கஜமுகாசுர சங்காரமும் நடைபெறவுள்ளன. (ஐ-135)

★ ★ ★

திருநெல்வேலி, டிசெ 12

யாழ். கந்தர்மடம் ஆத்தி சூடி வீதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில நாளை திங்கட்கிழமை பிள்ளையார் கதை நிறைவு நாள் விசேட அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து கஜமுகாசுரன் வதை உற்சவமும் நடைபெறவுள்ளன. (ஐ-135)

★ ★ ★

நவாலி, டிசெ. 12

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் இன்றுஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணி முதல் கஜமுக சூர சங்கார உற்சவம் நடைபெறும். (க-100)

★ ★ ★

ஆனைக்கோட்டை கரைப்பிரான் ஆதி விநாயகர் ஆலய கஜமுக அசுரசங்காரம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகும். நாளை திங்கட்கிழமை காலை 9 மணிமுதல் மஹாகணபதி ஹோமம இடம்பெறும். (க-100-30)

★ ★ ★

புன்னாலைக்கட்டுவன் டிசெ 12

புன்னாலைக் கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு கஜமுக சூரசங்காரம் இடம்பெறும் (க-33)

★ ★ ★

நெடுந்தீவு, டிசெ.12

நெடுந்தீவு மத்தி புனித தொம்மையப்பர் ஆலய வருடாந்த திருப்பலிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் 21 ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஒன்பது தினங்கள் நடைபெறும்

பங்குத்தந்தை அருட்திரு மொன்வெட் அடிகள் திருப்பலிப் பூசைகளை ஒப்புக் கொடுப்பார். (க-111)

★ ★ ★

நெடுந்தீவு மேற்குகரம்பதை கந்தசுவாமி கோயிலில் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தொடக்கம் 22 ஆம் திகதி வரை திருவெம்பாவை உற்சவம் நடைபெறும் [க-111]

★ ★ ★

கோண்டாவில் நெட்டிலிப்பாய் ஸ்ரீ பிள்ளையார் கோயிலில் இன்றுஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு பிள்ளையார் பெருங் கதைப்படிப்பும் மாலை 4.00 மணிக்கு கஜமுகசங்காரமும் இடம்பெறவுள்ளன. (க-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 05 | 12 |
| — | — |
| 12 | 11 |
| — | — |
| 1934 | 1999 |

### அமரர் பொன்னுச்சாமி சுந்தரலிங்கம்
(சின்னமணி பத்தர்)

அன்புத் தெய்வமே!
எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே!
பண்பின் சிகரமே பாசத்தின் உறைவிடமே
நீங்கள் எம்மைவிட்டுச் சென்று
மாதம் ஒன்று மறைந்தாலும்
எங்கள் நெஞ்சங்களில் என்றும்
அணையாத தீபமாய் ஒளி வீசுவீர்கள்!

கடந்த 12-11-1999 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் மரணச் செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இன்று (12-12-99) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

74/1, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை.

(71698)

## புதிய சப்பறம் அமைப்பு

வேலணை, டிசெ. 12

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் தேவஸ்தானத்திற்கு புதிய சப்பறம் ஒன்றினை வடிவமைப்பதற்கான ஆரம்ப முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதற்கென சப்பறத்திருவிழா உபயகாரர்களால் சப்பறத் திருப்பணிச்சபை ஒன்று அமைக்கப்பட்டு அதனூடாக சப்பறத்தினை வடிவமைப்பதற்கான நிதி உதவிகள் திரட்டப்பட்டு வருகின்றன.

(ஐ-167)

## நாய்களுக்கு தடுப்பூசி

தென்மராட்சி, டிசெ 12

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பின்வரும் இடங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விசர் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் சி. யமுனானந்தா அறிவித்துள்ளார்.

பளைப் பிரிவில் டிசெம்பர் 20 ஆம் திகதி (20/12) காலை 9:00 மணிக்கு பெரிய பளை சனசமூக நிலையத்திலும் —

காலை 11-00 மணிக்கு வண்ணான்கேணி சனசமூக நிலையத்திலும் —

பி. ப. 1-00 மணிக்கு புலோப்பளை கிராமிய அபிவிருத்திச் சங்க மண்டபத்திலும் — தடுப்பூசி ஏற்றப்படும். பின்னர் 23 ஆம் திகதி கொடிகாமம் பிரிவில் சாவகச்சேரி பிரதேச சபை கச்சாய் அலுவலகம் மடத்தடி வீதி, நாவலடி ஆகிய இடங்களிலும் தடுப்பு மருந்து வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)


## தேவை

யாழ். நகரில் உள்ள பிரபலமான விற்பனை நிலையத்திற்கு Sales Clerk தேவை. ஆங்கிலத்தில் எழுத வாசிக்கத் தகுதியுடையவர்களும் முன் அனுபவமுள்ளவர்களும் விரும்பத்தக்கது.

விண்ணப்ப முடிவு திகதி: 20-12-99

விளம்பர இல. 983,
மே/பா உதயன்.

(71681)

## தேர்தல் வாக்கு

卐 தேர்தல் வாக்கு ஒரு மனித உரிமையாகும்.
卐 தேர்தல் வாக்கு அரசியல், நீதிக்கு உட்படுகின்றது.
卐 வாக்குப் பலத்துடன் எங்கள் உறுப்பினர் ஒருவரை தெரிவு செய்வதற்கு எங்களுக்கு உரிமை உண்டு.
卐 உங்கள் வாக்கை நீங்களே பாவியுங்கள்.
卐 உங்கள் வாக்கை களவு செய்வதற்கு இடம் அளிக்க வேண்டாம்.
卐 உங்கள் வாக்கை வீணாக்க வேண்டாம்.
卐 கள்ள வாக்கு போடுவதற்கு, சீட்டை களவு செய்பவர்களை அனுமதிக்காதீர்கள்.
卐 கள்ள வாக்கு போடுபவர்களை தடை செய்வதற்கு நேர காலத்துடன் உங்கள் வாக்குகளை உபயோகியுங்கள்.

ALLIANCE FOR JUSTICE

(71671)

## விற்பனைக்கு உண்டு

எங்களிடம்:

'சாப் 1118, 1020' போட்டோ கொப்பி மெசின்கள்

இதற்குரிய ரோலர் வகைகள் விற்பனைக்குள்ளன.

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.
வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

ஜெயகிருஷ்ணா றேடர்ஸ்
240, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. 2837

குமரன் றேடர்ஸ்
119, கண்டி வீதி,
சாவகச்சேரி.
070 — 212245
070 — 212318

(71685)


## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை - மல்லாகம்
# கேள்வி அறிவித்தல்

கீழ்க்குறிப்பிட்ட வேலைகளுக்கான கேள்விகள் 1999-12-24 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி வரை ரூபா 200,000ற்கு மேல் அரசாங்கத் திணைக்களங்களில் 'இக்ராட்' நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடம் இருந்து என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இந்தக் கேள்விகள் 1999-12-27 காலை 10.00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை ''தலைவர், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை, மல்லாகம்'' என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை ''பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கும் எதிர்வரும் 1999-12-24 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்படல் வேண்டும்.

| வேலையின் பெயர் | வைப்புப் பணம் | படிவப் பணம் |
|---|---|---|
| 1. கட்டுவன்புலம் பாடசாலை வீதி வேலை | 3000.00 | 500.00 |

மேற்படி வைப்புப் பணத்தையும், கேள்விப்படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் பேரில் 1999-12-10 ஆம் திகதி முற்பகல் 10.00 மணி முதல் 23-12-1999 ஆம் திகதி பி. ப. 2.00 மணி வரை எம்மால் படிவங்கள் வழங்கப்படும். எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

வி. சண்முகநாதன்,
உபதலைவர்.

வலி. வடக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
காங்கேசன்துறை, மல்லாகம்.

(ஐ/10167)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### திருமதி பரமேஸ்வரி பாலசிங்கம்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 29-04-1929 | 12-11-1999 |

பத்தாவுக்கேற்ற பதிவிரதை நீயானாய்
பாசம் மிக வைத்தாய் அன்புத் தாயானாய்!
வத்தானைப் புலச்சோதரர்க்கு அன்புத் தங்கச்சியானாய்!
வந்த மருமக்கள் சொந்த மருமக்கள் எல்லாம்
வாழ்க்கையுடன் அழைக்க நல்மாமியானாய்!
அக்காவின் மக்களுக்கு சித்தியானாய் செவிலித் தாயானாய்!
உற்றார், உறவினர்க்கும், ஊரவர்க்கும் அயலவர்க்கும்
உற்ற துணையாய் உபகாரியுமானாய்!- இவ்வுலகில்
பெற்றதோர் வாழ்க்கை வாழ்வாங்கு வாழ்ந்து
செற்றார் வாழ் தில்லைச் சிற்றம்பல வனடி
சென்றாய் தங்கமே! அங்கு நீடூழி வாழி!! வாழி!!!

தா. பாலசிங்கம்
குடும்பத்தினர்

சென்டா வளவு,
இருபாலை.

(71696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலய பரிபாலன சபையின்
# ஆண்டுப் பொதுக்கூட்டம்

இடம்:- ஆலய மண்டபம்
காலம்:- 26 - 12 - 99 ஞாயிறு
நேரம்:- காலை 10.00 மணி

நிகழ்ச்சி நிரல்

★ இறைவணக்கம்
★ தலைவர் உரை
★ செயலாளர் அறிக்கை
★ பொருளாளர் அறிக்கை
★ நிர்வாகசபைத் தெரிவு
★ பொது விடயங்கள்
★ நன்றியுரை
★ இறை வணக்கம்

மேற்படி ஆலய பரிபாலனசபை அங்கத்தவர்கள், உபயகாரர்கள் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றி நிர்வாக சபையைத் தெரிவு செய்வதற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

பொதுக் கூட்டத்தில் பிரேரணைகள் சமர்ப்பிக்க வேண்டின் 7 நாள்களுக்கு முன் பிரேரணைகள் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது வருகை தரவும்.

க. ஏகாம்பரம்
தலைவர்

க. இராசலிங்கம்
செயலாளர்

தி. ஸ்ரீஸ்கந்தராசா
பொருளாளர்

(71664)



களபூமி - காரைநகர்
# தன்னைப்பிள்ளையார் கோயில்
# பெருங்கதைத் திருவிழா விஞ்ஞாபனம்

நிகழும் மார்கழித் திங்கள் 13 - 12 - 99 பெருங்கதை அபிஷேகம் நடைபெறும். 'விசேட மேளக்கச்சேரியுடன் விநாயகப் பெருமான்' எழுந்தருளி வீதி வலம் வருவார் அத்தினத்தில் அடியார்கள் வந்து சுவாமி தரிசனம் செய்து இஷ்டசித்திகளைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம். எல்லோரும் திருவிழாவில் கலந்து கொள்ளுங்கள்.

பிள்ளையார் அருள் பெறுங்கள்!

★ விசேட மேளக்கச்சேரி
K. சிவகுமார் குழுவினர்

**'விக்கினம் தீர்க்கும் விநாயகர்'**
என்ற பொருள் பற்றி
செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்
(ஆசிரியர், ஸ்கந்தவரோதயாக் கல்லூரி)
அவர்கள் சிறப்புச்சொற்பொழிவாற்றுவார்!

திருவிழா உபயகாரர்,
**விநாயகர் ரேடேர்ஸ்**
1026, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம்.

சோ. குகநேசசர்மா
பிரதம அர்ச்சகர்,
தன்னைப்பிள்ளையார்
களபூமி, காரைநகர்.

(71682)


# 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18 – 11 – 1936

மறைவு:
29 – 11 – 1992

அமரர் **கந்தையா சிவலிங்கமூர்த்தி**
(முன்னாள் படவரைஞர், நில அளவைத் திணைக்களம்)

திதி. 12.12.1999

ஆண்டு ஏழு ஆனதையா
ஆறவில்லை எம் துயர்
ஒரு கணமும் பிரியாத நீங்கள்
ஒரு நொடியில் பிரிந்தீரே!

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்
மருமக்கள் – சாந்தகுமார், கலைச்செல்வன்
பேரப்பிள்ளைகள் தனுஜா, கஜன், ஜனனி

231, 'சட்டநாதர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(71584)

## ஒளி விழா

யாழ்ப்பாணம் டிசெ. 12

இலங்கையின் ஒரேயொரு கத்தோலிக்கப் பத்திரிகையான 'பாதுகாவல'னின் ஏற்பாட்டிலான ஒளிவிழா இன்று மறைக்கல்வி நடுநிலையத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறைக்கோட்ட முதல்வர் அருட்திரு ஏ. சி. கிறிஸ்தோபரும், சிறப்பு விருந்தினராக மறையாசிரியர் இ. ம. ஜெயசீலனும் கலந்து கொள்வர்.

கலைநிகழ்ச்சிகளும், பட்டிமன்றமும் இடம்பெறும்.

(இ-3-8)

## நல்லின தென்னங்கன்றுகள்

வலி. மேற்கு, டிசெ. 12

தொல்புரம் கமநல சேவை நிலையத்தில் நல்லின தென்னங்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன.

இரண்டு வருடங்களுக்கும் மூன்று வருடங்களுக்கும் இடையில் காய்க்கக்கூடிய இந்தத் தென்னங்கன்று 40 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. 300 தென்னங்கன்றுகளே இருப்பதாகவும் ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு பத்துக் கன்றுகளே விநியோகிக்கப்படவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

(இ-175)

## போஷாக்கு பயிற்சி நெறி

கொழும்புத்துறை, டிசெ. 12

மக்களின் பங்களிப்புடனான போஷாக்கு நிலை முன்னேற்றத் திட்டத்தின் கீழ் 'யுனிசெவ்' உதவியுடன் 16 ஆவது தொகுதி சமூக அனுசரணையாளர்களுக்கான பயிற்சி நெறி நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 17ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை யாழ்.நாவலர் கலாசார மண்டபத்தில் காலை 8 30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

'போரூட்' நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட ஐம்பது தொண்டர்கள் இப் பயிற்சியில் பங்குபற்றவுள்ளனர்.

(ஐ-30)

## கசிப்பு விற்பனை தண்டனை விதிப்பு

வலி. வடக்கு, டிசெ. 12

சட்டவிரோதமாக கசிப்பு வைத்திருந்தது, அதனை விற்பனை செய்தமைபோன்ற குற்றச்சாட்டுகளின் பேரில் மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி மு. சபாநாதன் முன் இளாலை பொலீசார் ஆஜர் செய்த சந்தேக நபர் குற்றவாளியென ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து 5 ஆயிரம் ரூபா குற்றம் விதிக்கப்பட்டது. ஆயிரம் ரூபா தர்மப் பணம் கட்டவும் உத்தரவிடப்பட்டது.

(இ-3-86)

## உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிதி

தென்மராட்சி, டிசெ. 12

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதியிலிருந்து மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு விசேட நிதி வழங்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பிரதேச சபை, பளைப்பிரதேச சபை ஆகியவற்றுக்கு தலா மூன்று லட்சம் ரூபா வீதம் நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் —

இந்த நிதியில் சாவகச்சேரி பிரதேச சபைக்கு குப்பைகள் அகற்றுவதற்கென இரு சக்கர உழவு இயந்திரமும் பளைப் பிரதேச சபைக்கு ஜெனரேற்றரும், போட்டோ பிரதி இயந்திரமும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)


# தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ. சங்கம்,
கைதடி
# உழவு இயந்திரப் பெட்டி தேவை

எமது சங்கத்துக்கு இங்கிலாந்தில் உருவாக்கப்பட்ட நல்ல நிலையில் உள்ள உழவு இயந்திரப் பெட்டி தேவைப்படுகிறது. வைத்திருப்போர் தரம், விலை போன்றவற்றுடன் விண்ணப்பிக்கவும்.
விண்ணப்ப முடிவு திகதி: 16-12-99 வரை.

பெட்டி நல்ல முறையில் இருக்க வேண்டும். இது விடயம் சார்பாகத் தொடர்பு கொள்வதாயின் வேலை நேரத்தில் சங்க த. காரியாலயத்தில் அறிந்து கொள்ளலாம்.

நன்றி!

– தலைவர்



உ
கணபதி துணை
இளவாலை அருள்மிகு
# ஆனைவிழுந்தான் தேவஸ்தான
# கஜமுகசங்காரம்

காலம்:- 12 - 12 – 99 ஞாயிற்றுக்கிழமை
நேரம்:- பிற்பகல் 2. 00 மணி

விநாயகப் பெருமான் அடியார்கள் யாவரும் வருகை தந்து எம்பெருமானைத் தரிசித்து விநாயகப்பெருமானின் திருவருளைப் பெற்றுய்வீர்களாக

விழா உபயகாரர்,
அம்பாள் தொலைத் தொடர்பகம்.
திருநெல்வேலி.

(71706)



# விற்பனைக்கு

உங்கள் உறவினர்கள், நண்பர்களுக்கு நத்தார், புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளத் தேவையான பலவிதமான ✠ நத்தார் ✠ புதுவருட வாழ்த்து மடல்களை

எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகட்கு விசேட கழிவு உண்டு.

**ஓல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**
132, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு கொள்ள தொலைபேசி எண்:- 2666

(71490)



# ஜெசித்தாராவின்
# விசேட சலுகை

எமது உணவுப் பெட்டிகள் அதாவது புரியாணி, பிரைட்றைஸ், நூடில்ஸ், லம்பிறிஸ் போன்றவற்றை வாங்குபவர்களுக்கு 11-12-99 முதல் 10-1-2000 வரை ஒவ்வோர் உணவுப் பெட்டியுடனும் அமெரிக்கன் ஸ்டிக்கர்கள் இனாம்! இச்சலுகை கையிருப்பு முடியும்வரை மட்டுமே. முந்துங்கள்! முந்துங்கள்!

ஜோ. எகட்டனின் 'ஜெசிந்தாரா'
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை)
சுண்டுக்குளி.
'2000 யுகத்தில் புது உதயம் ஜெசிந்தாரா'

(சி/10170)


# ஈராண்டு நினைவலைகள்



மலர்வு
30-12-1970

உதிர்வு
12-12-1997

**சண்முகராசா சிவநேசன்**

நேசத்தின் நேசனே சிவநேசா!
எம் குடும்பத்தின் அணையாத தீபமே!
நீ எம்மை விட்டுப் பிரியவில்லை;
எம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாய்!

உன் நினைவுகளுடன்
– குடும்பத்தினர்

116, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

(71708)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேறுபட்டு நிற்கின்ற மன எழுச்சிகளை நெறிப்படுத்தும் கல்விமுறை மிகவும் அவசியம்

ஒவ்வொரு மனிதனது சிறப்புகளும் சமூக முன்னேற்றத்திற்கும் கல்வியே அருந்துணையும் பெருந்துணையுமாகும். இன்று கல்வியின் மையப் பொருளாகக் கருதப்படுவது குழந்தையாகும். குழந்தைக் கல்வி முறையை முதல்முதல் அறிமுகப்படுத்தியவர் ஔவையாராவார். இவர் தமிழ்த் தாய் என்று பாராட்டப்பட்டவர். ஔவையார் பல அறநூல்களை இயற்றினார். இவற்றுள் பெரும்பாலானவை சிறுவர்களை நல்வழியில் நடக்கத் தூண்டும அறிவுரைகளைக் கொண்டுள்ளன. இந்த அறிவுரைகள் இனிமையும் எளிமையும் பொருள் ஆழமும் கொண்டவை.

'ஆறுவது சினம்' 'ஒப்புரவு ஒழுகு' 'ஔவியம் பேசேல்' 'இணக்கம் அறிந்து இணங்கு' 'தந்தை தாய் பேண்' 'வஞ்சம் பேசேல' 'இளமையில் கல்' 'குணமது கைவிடேல்' 'கெடுப்பது ஒழி' 'தீவினை அகற்று' 'தாக்கி வினைசெய்' 'தெய்வம் இகழேல்' 'நன்மையைக் கடைப்பிடி' உத்தமனாய் இரு' என்றெல்லாம் சொல்லி சிறுவர் உள்ளத்தில் சாந்தியையும் சகிப்புத்தன்மையையும் நிலைபெறச் செய்துள்ளார்.

குழந்தை நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பில் மட்டும் தங்கியிருக்கவில்லை; ஆசிரியர்களின் கல்வியூட்டலிலும் தங்கி உள்ளது. குழந்தைகளது சிறப்பியல்புகளையும் தேவைகளையும் அறிந்திராத ஆசிரியரால் அதனுடைய ஆரோக்கியமான, அறிவு ஆற்றல்மிக்க வளர்ச்சிக்கான கல்வியை வழங்க முடியாது.

குழந்தை பிறந்தது முதல் முதுமை அடையும்வரை பல மாற்றங்கள் அடைகின்றது. கல்வியின் முக்கிய நோக்கம், குழந்தையின் வளர்ச்சி நல்ல முறையில் அமைவதற்கும் அதில் பயனுள்ள மாற்றங்களும் முன்னேற்றங்களும் தோன்றுவதற்கும் உதவி செய்தலாகும். கல்வி அறிவு இன்றி ஏற்படும் வளர்ச்சி சிறந்த முறையில் அமையாது. குழந்தையினுடைய வளர்ச்சியை மரபுநிலையும், சூழ்நிலையும் பாதிக்கின்றன. வளர்ச்சி என்பது தொடர்ந்து நிகழ்வது. இந்த வளர்ச்சி சில நிலைகளை உடையது. இவ்வளர்ச்சி நிலைகள் ஒன்றோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையவை எனினும் மனஉணர்ச்சிகளும் மனஎழுச்சிகளும் வேறுபட்டுநிற்கும். இவற்றை அறிந்து பெற்றோரும் ஆசிரியர்களும் நெறிப்படுத்த வேண்டுமெனக் கல்வியியலாளர் கூறுவர்.



மறுவினைகள், இயல்பூக்கங்கள் போன்ற பிறப்பில் இருந்தே அச்சம், சினம், அன்பு போன்ற மன எழுச்சிகளும் காணப்படுகின்றன. மனஎழுச்சிகள் மனிதனது வாழ்க்கையில் முக்கிய பங்கு கொள்கின்றன என்பர். ஒருவர் தமது வாழ்க்கையில் பெறும் வெற்றிகளுக்கும் நன்மதிப்புக்கும் அவரது அறிவுத்திறனைக்காட்டிலும் மன எழுச்சிகளின்முதிர்ச்சியும் சமநிலையுமே பெரும்பாலும் அதிக அளவில் உதவுகின்றன எனலாம். மன உணர்ச்சிகள் நமது உள்ளத்தில் எப்போதும் காணப்படும். இவை மகிழ்ச்சி, மகிழ்ச்சி இன்மை என இரு வகைப்படும் நமது ஒவ்வொரு செயலுக்கும் பின்னணியாக இவை நமது உள்ளத்தில் எழுந்துகொண்டே இருக்கும். மன எழுச்சிகள் போன்று தீவிர உணர்ச்சிகளை இவை அளிக்கமாட்டா. மன எழுச்சிகள் நெருக்கடி நிலைமைகளில் பீறிட்டுஎழும் மன எழுச்சி அனுபவங்களில் இம் மன உணர்ச்சி பெருமளவில் தோன்றும். அவை மேலோங்கி எம்மை ஆட்கொள்ளும்போதே மன எழுச்சிகள் தோன்றும் மனிதரை வெகுவாகப் பாதிக்கும் இக்கட்டான அவசர நிலைகளில் இவை தோன்றி நமது உள்ளத்தையும் உடலையும் கிளர்ச்சியடையச் செய்கின்றன. இந்த வேளைகளில் மகிழ்ச்சி, மகிழ்ச்சி இன்மை போன்ற மன உணர்ச்சிகள் அதிக அளவில் பங்குபெறுவதுடன் உள்ளுறுப்புகளையும் இவை பாதிக்கின்றன. அவ்வுள்ளுறுப்புகளில் இருந்து வரும் உறுத்துணர்ச்சிகளும் மன வெழுச்சிகளோடு இணைந்து மேலெழும்புகின்றன. மன எழுச்சிகள் அவற்றைத் தோற்றுவித்த நிலைகளை வரவேற்று, எதிர்கொண்டு செல்லவோ அல்லது எதிர்த்துப் போராடவோ அல்லது ஓடி ஒளிக்கவோ ஒருவனைத் தூண்டும் இதனால் சமநிலை பிறழ்ந்துபோகிறது அவனைச் சுற்றிலும்அமைதிகுலைகிறது சகிப்புத்தன்மை அற்றுப் போகிறது.

மன எழுச்சிகள் கட்டுப்பாடற்றுப் போகுமாயின் அசாதாரணநடத்தை நெறிப்பிறழ்வு போன்றவை உண்டாகும். எனவே கல்விப் போதனை மூலம் மனித வாழ்வின் மேம்பாட்டிற்காக அமையும் சாந்தி, சமாதானம், சகிப்புத்தன்மை, சத்தியம், தர்மம், அன்பு, அகிம்சை என்பனவற்றைச் சார்ந்து மன எழுச்சிகள் மாணவரிடத்தில் எழும்படியாக ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும்.

இசை, சிற்பம், ஓவியம், நடனம், வரலாறு, கவிதை, இலக்கியம், சமயம் போன்றவை சிறந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படின் மாணவர்களது மனஎழுச்சிகள் தூய்மை அடைந்து மனித மேம்பாடும் மனித நேயமும் மலர்ந்து எல்லோரும் ஒரு பொல்லாப்புமில்லாமல் வாழலாம். ★

**தில்லைநாதன் ஜெயந்தன்**
**(ஆண்டு 11 'டி' யாழ். மத்திய கல்லூரி)**

## மாதத்தின் சிறந்த கட்டுரை

'யுனெஸ்கோ' ஆதரவில் பாடசாலைகள் ஊடாக நடத்தப்படும் கல்வி மூலம் சமாதானம் என்ற கருத்துப் பகிர்வை முன்னெடுக்கும் வகையில் 'உதயன்' அனுசரணையுடன் இடம்பெறும் கட்டுரைப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளில் இதுவும் ஒன்றாகும். நவம்பர் மாதத்துக்குரிய சிறந்த கட்டுரையாக இது தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தரம் ஆறு தொடக்கம் தரம் 11 வரையுள்ள மாணவர்கள் இக்கட்டுரைப் போட்டியில் பங்குபற்றலாம். கட்டுரைகள் 300 சொற்களுக்கு மேற்படாமலிருக்க வேண்டும். கட்டுரை மாணவரின் சொந்த ஆக்கம் என்பதனை சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப்படுத்துவது அவசியம்.

அந்தந்த மாதத்துக்குரிய கட்டுரைகள் குறிப்பிட்ட மாத இறுதிக்கு முன்னர் வந்து சேர வேண்டும். கட்டுரைகளை 'ஆசிரியர், உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு கடித உறையின் மேல் மூலையில் 'யுனெஸ்கோ கட்டுரைப் போட்டி' என்று எழுதி அனுப்புக.

**'உதயன்' அனுசரணையுடனான 'யுனெஸ்கோ' கட்டுரைப் போட்டி**

## மக்கள் முகம்



சோண்டாவிலைச் சேர்ந்த சிவஸ்ரீ சண்முகசுந்தர ஸ்ரீஸ்கந்தராஜக்குருக்கள் 27-09-99 யாழ். மாவட்ட நீதிபதி எஸ். ஏ. ஈ. ஏகநாதன் முன்னிலையில் சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் சோண்டாவில் இந்துமகா வித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர் ஆவார். யாழ்ப்பாணம் சீதாராம சாஸ்திரிகளிடம் வேதசிவாகமங்களை முறைபாகக்கற்று சிங்கப்பூரில் குருப்பட்டம் பெற்றார். இவர் சமய கலை கலாசாரங்களை அடிப்படையாகக்கொண்டு சமூக சேவையில் ஈடுபட்டு வருகிறார். அதனால் இவருக்கு சிவாகம கிரியா ஞான வித்தகர், வேதவிற்பன்னர், சிவாகம கிரியாபூஷணம், சிவதொண்டு சீர்மாமணி போன்ற பட்டங்கள்வழங்கப்பட்டுள்ளன.

இவர் மலேசியா இந்துசமய அபிவிருத்திச் செயற்குழு உறுப்பினராகவும், யாழ். கோண்டாவில்இந்து மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க பொருளாளராகவும் யாழ் இந்துக் கல்லூரி பழையமாணவர் சங்க செயற்குழு உறுப்பினராகவும் கல்விச் சமூகத்திற்கு தொண்டாற்றுவது குறிப்பிடத்தக்கது.

மேலும் இவர் கோண்டாவில் சந்திரசேகரப் பிள்ளையார், நாகபூஷணி அம்மன், மகா கணபதி ஆலயம், முனீஸ்வர ஆலயங்களின் பிரதம குருவும் ஆவார்.

(ஐ)

# இக்காலப்பிரச்சினையைச் சொல்லும் எளிமையானதொரு கவிதை வடிவம்

## நூல் வரிசை

**ஆசிரியர்: கவிஞர் அல்லை ஆறுமுகம்**
**நூல்: மனிதமும் மதமும்**

மாதா கோயில் மூப்பர் மகள் மரிய புஸ்பம். தங்கச் சிலை போன்ற அழகி. செல்வச் செழிப்புள்ள குடும்பத்தில் ஒரே பெண். படிப்பில் கெட்டிக்காரி. இருதய வியாதிக்காரரான மூப்பர் தம் மகளுக்கு திருமணம் முடித்துப் பார்க்க அவசரப்படுகிறார்.

மகளோ தான் எந்த வேற்றார் மாப்பிள்ளைக்கும் மாலையிடப் போவதில்லை என்று சொல்லிவிடுகிறாள். அவளை வற்புறுத்திக் கேட்டதில், எழுத்தாளனும் ஊர்த்தொண்டனுமான முருக சண்முகன் மீது அவளுக்கு ஈடுபாடு இருப்பது தெரிய வருகிறது.

அவனைப் போல இன்னோர் இளைஞனைத் தேடியும் காண முடியாது என்பதே உண்மை. ஆனால் இந்தத் திருமணத்துக்குக் குறுக்கே நிற்பது மதத்தடை. இத்தடையை எப்படித் தாண்டி மகள் மனம் போல ஒரு வாழ்வை அமைத்துக் கொடுக்கலாம் என்று மூப்பர் தலையைப் போட்டுடைக்கிறார்.

இவரோ கிறிஸ்தவக் கோயில் ஒன்றின் மூப்பர். முருக சண்முகனோ சைவ சமய சாரத்தை வழுவாது பின்பற்றும் ஒருவன். அவனோ மதம்மாறச் சம்மதியான். இவன் மதம் மாறினால் கிறிஸ்தவ உலகம் சகிக்காது.

மகளே இதற்கு ஒரு வழியையும் சொல்கிறாள். திருமணத்திற்காக முருக சண்முகன் மதம் மாறி ஒரு சில மணிநேரம் கிறிஸ்தவனாக இருக்கவேண்டும். திருமணம் முடிந்ததும் தவத்தை விட்டு இருவரும் சைவத்துக்கு மாறலாம்

இந்தத் திட்டம், பழைய விதானையார் பசுபதிப்பிள்ளை மூலம் முருகசண்முகனுக்குத் தெரிவிக்கப்படுகிறது. எட்டாப் பழம் எனத் தான் கருதிய புஸ்பம் தன் ரசிகை என்பதை வேறு சிலர் வாயிலாக அவன் முன்பே கேட்டிருக்கிறான். ஆனாலும் மதம் மாறிப் பிறகு சொந்த மதத்துக்கு மீளும் திட்டத்தை அவன் ஒப்பவில்லை. ''பந்து இன்னமும் உன் பக்கந்தான்'' என்று கடிதம் எழுதிவிட்டு அவன் பதிலுக்கு காத்திருக்கிறான்.

காலம் ஓடியது. நாள்கள் வாரங்களாய், வாரங்கள் மாதங்களாயின. பதில் வரவேயில்லை. மூப்பர் குடும்பத்தோடு வெளிநாடு போய் விட்டார் என்ற செய்தி கிடைக்கிறது எந்தநாடு எந்த ஊர் என்று சொல்லுவார் யாருமில்லை. ''மூப்பனார் மகளுக்கு மூளை சரியில்லை'' என்ற வதந்தி அடிபடுகிறது.

இதுவே கவிஞர் அல்லை ஆறுமுகத்தின் 'மனிதமும் மதமும்' என்ற கவிதை நூல் சொல்லும் கதை. மத மாற்றத்தை வைத்துப் புதுமைப்பித்தன் கதை எழுதியிருக்கிறார். ம. வே. திருஞானசம்பந்தபிள்ளை கதை எழுதியிருக்கிறார். இவர்கள் எழுதியது 50வருடங்களுக்கு முன்பு. திருமணத்தின் பொருட்டு மதம் மாற ஆணோ பெண்ணோ நிர்ப்பந்திக்கப்படுவது பற்றி இப்போது யாரும் எழுதக் காணோம். ஆனால் பிரச்சினை நீறுபூத்த நெருப்பாகவே இருக்கிறது என்பதை அல்லை ஆறுமுகத்தின் இக் குறுங்காவியம் சுட்டிக் காட்டுகிறது.

காதலர் இணைவதற்குத் தடையாக இருப்பது மதம்.

''மதத்திற்கும் வாழ்விற்கும் இன்று தொடர்பில்லை. மனிதரெலாம் ஒருமதம் தான் வாழ்வில்...'' என்பது கவிஞருடைய பிரகடனம்.

''மதங்களே, மதங்களே
மக்களைத் தேவராக
வாழவைப்பதற்கு முன்
மக்களை மக்களாயிம்
மண்ணில்வாழவிடுங்களேன்''

என்று தம் கதையைநிறைவு செய்கிறார் அவர்.

சமகாலப் பிரச்சினைகளை எழுத்தில் வடிக்கும் போது எந்த வடிவத்தைப் பயன்படுத்துவது என்பது எழுத்தாளருக்குள்ள பிரச்சினை.

**சோ. பத்மநாதன்**

இக்கால நிகழ்ச்சிகளைச் சொல்ல கவிதை ஏற்ற வடிவமல்ல என்று சிலர் நினைக்கிறார்கள். அது தவறு என்று நாட்டுகிறது மனிதமும் மதமும்.

இலக்கியப் பயிற்சி இல்லாதார் உரைநடையோ என்று மயங்கும் அளவுக்கு எளிமையான — இயல்பான — நடையில் இக்கவிதை அமைந்திருப்பது இதன் சிறப்பு. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாதம் பீடையானது என்பது தவறு; அது பெரும் பீடு கொண்ட பெருமைக்குரியது!

## திருவாதிரை அபிஷேகம் சிறப்பு அம்சம்

மக்களுக்கு ஓர் ஆண்டு தேவர்களுக்கு ஒரு நாளாக அமைகிறது. ஒரு நாள் என்பது பாதிபகலும் பாதி இரவுமாகும். இது போலவே தேவர்களது நாளும் பாதி பகலும் பாதி இரவுமாய் உள்ளது அந்த இரு கூறுகளே உத்தராயணம், தட்சணாயனம் எனப்படும்.

உத்தராயணம் தேவர்களுக்குப் பகற்காலமும் தட்சணாயனம் இராக்காலமும் ஆகும். தைமாதம் முதல் திகதி தொடக்கம் ஆனி மாதம் முடிவு வரையுமுள்ள ஆறு மாதங்களும் உத்தராயணம் என்றும் ஆடி மாதம் முதல் தேதி தொடக்கம் மார்கழி மாதம் முடிவு வரையுமுள்ள காலம் தட்சணாயனம் என்றும் கூறப்படும். எனவே தை மாதத்திற்கு முந்திய மாதமாகிய மார்கழித் திங்கள் தேவர்களுக்கு வைகறைப் பொழுது என்பது தெளிவு.

மார்கழி மாதம் தேவர்களுக்கு வைகறைப் பொழுதாதலின் அம்மாதம் சிறப்படைகிறது. இதனால் வைகறைப் பொழுது தெய்வப் பொழுதாதல் போல, மார்கழி தெய்வத் திங்கள் ஆகின்றது. ஆண்டுக்குரிய நலன்களையெல்லாம் இவ்வொரு திங்களே வழங்குதலால் இத்திங்களைப் பெருமையுடைய திங்கள் என்னும் பொருளில் பீடுடைய மாதம் என்றனர்.

இதனை அறியாதார் இம்மாதத்தைப் பீடை மாதம் எனப் பிறழ உணர்ந்தனர். ஆதிரையான் என்று அழைக்கப்படும் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானுக்கு உகந்த திருவாதிரை நாளும் திருமாலுக்குகந்த வைகுண்ட ஏகாதசியும் இத்திங்களில் வருவது இதன் சிறப்பை நன்கு எடுத்துக் காட்டுகின்றது.

மார்கழி மாதத்தில் தெய்வ வழிபாட்டினை முறைப்படி செய்தால் ஆண்டு முழுவதும் அவ்வாறு செய்த பலன் உண்டாகும். இச்சிறப்புப்பற்றியே இந்த மாதம் முழுவதையும் தெய்வவழிபாட்டுக்கென ஒதுக்கி உலகியல் நிகழ்ச்சிகளாக திருமணம் முதலியவற்றைத் தவிர்த்து வைத்துள்ளனர் முன்னோர்.

சூரியகாந்தி
உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

எப்போதும் இடையறாது இறைவனைச் சிந்திக்கவேண்டியது அனைவருக்கும் உரிய கடமையாகும் என்றாலும் உலகியலில் ஈடுபட்டுள்ள பலருக்கு இஃது இயல்வது அன்று. இவர்கள் வைகறையில் எழுந்தவுடன் நீராடிச் சில நிமிட நேரமாவது தம் வழிபடு தெய்வத்திற்கு மலரிட்டு வணங்கிய பின், தமது கடமைகளில் ஈடுபடலாம்.

அதுபோல ஆண்டின் பன்னிரண்டு மாதங்களும் வழிபாட்டிற்குரியனவே என்றாலும் தேவர்களுக்கு வைகறைப்பொழுதாக விளங்குகின்ற மார்கழி மாதத்தினை மட்டுமாவது வேறு உலகியல் நிகழ்ச்சிகளுக்கு ஒதுக்காது வழிபாட்டிற்கே ஒதுக்கினால், ஏனைய மாதங்களில் வழிபட இயலாது போயினும் உரிய பயனை எய்தலாம் என்பதே இம்மார்கழி வழிபாட்டின் நோக்கமாகும்.

ஒவ்வொருநாளும் வைகறையில் எழுந்து நீராடி இறைவழிபாட்டினைச் செய்து முடித்த பின், தமது வேலையைத் தொடங்கினால் அஃது இடையூறு இன்றி நன்முறையில் முற்றுப் பெறும். அதுபோலவே மார்கழித் திங்களில் வழிபாடுகளை நன்கு புரிந்தால் அடுத்து வரும் உத்தராயணத்திற் செய்யப்படும் திருமணம் முதலிய செயல்களும் நன்கு முடியும். இது பற்றியே தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பழமொழி உருவாயிற்று.

### திருவாதிரை அபிஷேகம்

எமது முன்னோர் ஒரு நாளை ஆறுகூறாகப் பிரித்துச் சிறுபொழுது என வழங்கினர். அவை வைகறை, காலை, நண்பகல், எற்பாடு (எல்-சூரியன், பாடு-படுதல்) மாலை, யாமம் என்பனவாம். எமது ஓர் ஆண்டில் வருகின்ற கார்த்திகை, மார்கழி மாதங்களே தேவர் நாளில் வைகறைப் பொழுதாகும். இரண்டு மாதங்களும் வைகறைப் பொழுதாயினும் வைகறையின் பத்து நாளிகையில் பின்னுள்ள ஐந்து நாளிகையே சிறப்பாதல் போல மார்கழி மாதமே சிறப்புடையது நடராஜப்பெருமானுக்கு ஆண்டொன்றில் நிகழும் ஆறு அபிஷேகங்களும் தேவர் நாளில் வரும் ஆறு பொழுதுகளின் அமைப்பிலேயே நிகழ்த்தப்பட்டு வருகின்றன. இவை முறையே மார்கழி, மாசி, சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாதி மாதங்களில் நடைபெறுகின்றன.

சித்திரையில் ஓணமுதற்
சிராணியுத்திரமாம்
சத்ததனு வாதிரையுஞ்
சார்வாகும்-பத்தவளர்
மாசியரி கன்னி மருவு
சதுர்த்தசிமன்
நீசரபிஷேகதின மாம்

**காரைநகர் க. வைத்தீஸ்வரக் குருக்கள்**

மேற்கண்ட பாடல் இதனை விளக்குகின்றது. இவற்றுள் மூன்று நட்சத்திரத்திலும் மூன்று திதியிலும் அமைகின்றன. இவைகளுள் மார்கழித் திங்களில் வரும் திருவாதிரையில் நடைபெறும் அபிஷேகமே வைகறையில் நிகழும் உஷக்கால அபிஷேகமாகச் சிறந்து விளங்குகின்றது.

நட்சத்திரங்கள் இருபத்தேழினுள் திரு என்னும் அடைமொழி பெற்றுச் சிறப்புற்றவை இரண்டேயாம். ஒன்று திருவாதிரை; மற்றையது திருவோணம். திருவாதிரை சிவபெருமானோடு சம்பந்தமுடையது. 'ஆதிரை நாதன்' என்பது பரமசிவத்தின் பழைய பெயர்களுள் ஒன்று. திருவாதிரை நட்சத்திரம் சூரியனுக்குமேல் 350 ஒளிவருடங்களுக்கு அப்பால் 300 சூரியன்களைக் கொள்ளும் பருமனும், ஒரு இலட்சம் அளவு சூரியர்களின் வெப்பத்தைத் தரும் தன்மையினையும் உடையது என்பர் அறிஞர். திருவாதிரையைக் குறிப்பதாகிய 'ஆத்ரா' என்னும் வடமொழி நனைதல், ஈரமாதல், முழுகுதல் எனப் பொருள் தரலால் அந்நாளில் இறைவனுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்தல் விசேடமுடைத்தாயிற்று.

திருவாதிரை விழா மார்கழி மாதத்தில் பூரணையை அடுத்து வரும் திருவாதிரையை முடிவாகக்கொண்டு அதற்குப் பத்து நாள்களுக்கு முன் தொடங்கி நடத்தப

(11 ஆம் பக்கம் பார்க்க)

# விழிப்பான சிந்தனையில் புதுயுகம் வர வழிபாட்டுடனே வரவேற்போம்

உலகின் அனைத்து மூலை முடுக்குகளிலும் புதிய யுகம் ஒன்று புலருகின்றது என்ற மகிழ்விலே! இந்த யுகத்தை வரவேற்க பலவிதமான ஏற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். இந்த மகிழ்வு இரட்டிக்கும் வகையில், உலகில் எல்லாப் பாகங்களிலும் இறைமகன் இயேசு இவ்வுலகில் பிறந்த 2000 ஆண்டு 'யூபிலி' மகிழ்வைக் கொண்டாட ஆயத்தமாகின்றது.

எமது நாட்டை நோக்குவோமாயின்! ஒருபக்கம் ஆக்கிரமிப்புக்கள், மறுபக்கம் அனுதாபப்பேச்சுக்கள்!... ஒருபுறம் கோழைத்தனமான செயல்கள், மறுபுறம் வீரத்தனமான செய்திகள்!... இத்தனைக்கும், போர்க்களத்தை வைத்தே ஒரு தேர்தல் களம் அமைத்துவிட்டார்கள்!... வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டு வோட்டுக்களைச் சேகரிக்கின்றார்கள்.

'மக்களின் அரசு' 'மக்களுக்காக அரசு' என்று கூறும் அரசே மக்களைப் பற்றி கவலைப்படாத காலகட்டத்தில், மக்களே தங்களைப்பற்றி கரிசனை கொள்ள வேண்டிய காலமும், நேரமும் அண்மித்துவிட்டது. எனவேதான் ''கவனமாயிருங்கள், விழிப்பாயிருங்கள்'' (மாற்.13:33) என்கின்றது இன்றைய இறைமகனின் வார்த்தைகள்.

எமது பிரதேசங்களில், குறிப்பாக அண்மைக் காலத்தின் இடம்பெயர்வுகள், இழப்புகள், அழிவுகள், அகதி வாழ்வு, உயிர்கள் பறிக்கப்படுதல் போன்ற அவலங்கள் நீண்டுகொண்டேபோகின்றன. இத்தனையையும் மறைக்க முயல்வது முழுப்பூசினிக்காயைச் சோற்றில் மறைக்க எடுக்கும் முயற்சியாகும்.

இத்தனை அநியாயங்களையும் நியாயப்படுத்தி, அவற்றை அங்கீகரிப்பது போல சிலர் செயற்படுவது பனையால விழுந்தவனை மாடேறி மிதித்தது போன்றதாகும். இவர்களைப் பொறுத்தவரை '...பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாய் இருந்திருக்கும்'' என்ற இறைமகனின் சோகம் நிறைந்த சொற்கள் தான் இவர்களுக்கு வாழ்வைக் கொடுத்து வழியைக் காட்ட வேண்டும்.

ஞாயிறு நற்பிரசாதம்

எம்மைப் பொறுத்த வரை தேவாலயங்கள், கோயில்கள் எல்லாம் எமது இறைநம்பிக்கையின் வெளிப்பாடாகத் திகழ்கின்றன. இறைமக்கள் வழிபாடுகளிலே பங்குகொள்ளக் கூடுகின்ற புனிதமான இடங்கள். அவற்றில் குறிதவறாது நடந்தேறிய வன்முறைத் தாக்குதல்கள் மடுப்பகுதியையும் வந்தடைந்திருக்கின்றன.

அத்துடன் பல அப்பாவிகளின் உயிர்களைப் பலியெடுத்தும் இன்னும் பலருடைய வாழ்வையே சிதைத்திருக்கின்றது எந்த இடம் எமக்கு மிகவும் புனிதமானது என எண்ணினோமோ அந்த இடமே அவமதிக்கப்பட்டிருக்கின்றது!.. எந்த இடத்தில் தஞ்சம் கிடைக்கும் என நினைத்தோமோ அந்த இடம் இலக்கு வைக்கப்பட்டிருக்கின்றது. அப்பாவி மக்கள் மேல் வைக்கும் குறி, வைப்பவர்களுக்கே பொறியாக மாறிய நிகழ்வுகள் வரலாறு நமக்குச் சொல்லுகின்ற நிஜமான உண்மைகள்.

எனவேதான் இந்த நேரத்தில் விழிப்பாயிருப்போம். செபத்தில் ஒன்றாய் நிலைத்திருப்போம். விழிப்பான சிந்தனையோடும் விவேகமான செயற்பாட்டுடனும் நடக்க புலரும் புதுயுக வழிபாட்டு ஆண்டின் திருவருகைக்காலம்...... ''எல்லாருக்குமே சொல்லுகின்றேன்: விழிப்பாயிருங்கள்'' (மாற். 13:37) என எம்மை எச்சரித்து அறிவுறுத்துகின்றது. வாழ்வு பிறக்க வழி திறக்க வேண்டும், வழி திறக்க விழித்திருக்க வேண்டும். ★

**- அருட்திரு. அன்புராஜா** அ.ம.தி.

# எதிரொலி...

- இடியன் -

● ஏனைய மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழ் நாட்டிலேதான் அதிக அளவிலான சிலைகள் இருக்கின்றன; 50,000 சிலைகள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது ஆனால் பெரும்பாலானவை சரியான முறையில் பராமரிக்கப்படுவதில்லையாம்!

★ தங்கார் தகவிலர் என்பது அவர் 'சிலை'யின் 'எச்சத்'தாற் காணப்படும் என்பது புதுமொழியோ!

● புலிகளுடன் பேசத் தயார் என ஆளும் கட்சியும் பிரதான எதிர்க்கட்சியும் அறிவித்துள்ளன!

★ பேசுவதற்குத் தயாராக இருந்தால் மட்டும் போதாது அவர்கள் கூறுவதை விளங்கிக் கொள்ளவும் தயாராக இருக்க வேண்டும்!

● தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டுவதற்காகத் தமிழ்க் கட்சிகளின் உறுப்பினர்கள் சிலர் பசைவாளிகளுடன் யாழ்ப்பாணத்தில் நிற்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது

★ இப்போதென்று இல்லாமல் எப்போதுமே தேர்தல் இலவரப் ''பசை'' உள்ளவர்களாக ஆகுவது அதிசயமல்லவே!

● இந்தியாவிலே, இமயமலை சிறிது உயரமாக வளர்ந்துள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்!

★ இமாலய சாதனை!

● பாலிலே தண்ணீர் கலந்து விற்றவர்கள் சிலர், பரிசோதனை அதிகாரிகளிடம் அகப்பட்டு விட்டனராம்!

★ இது மகழகாலம்; ''வரப்புயர நீருயரும்; நீர் உயரப் பால் பெருகும்!'' என அவர்கள் சார்பில் வாதாடப்படலாம்!

● ஜனாதிபதி வேட்பாளர்களுள் சிலர், இறுதிநேரத்தில் போட்டியிலிருந்து விலகிக் கொள்ளக் கூடும்!

★ முன்(னரே) ''வாங்கி''னால் பின்வாங்கலாந்தானே!

● கல்லூரி செல்லும் மாணவிகள் கட்டாயமாகக் கருத்தடை மாத்திரைகளை உட்கொண்டுவிட்டே கல்லூரிக்குச் செல்ல வேண்டும் எனப் பிரான்ஸ் அரசாங்கம் அறிவித்துள்ளது!

★ கல்வியே கருந்தனம் என்ற நிலை மாறி கல்வியே கருந்தனம் என ஆகிவிட்டதோ?

● ஈ. பி. ஆர். எல். எவ். கட்சி இரண்டாகப் பிளவுபட்டு விட்டதாம்!

★ நாட்டைப் பிரிப்பது இராசத்துரோகம்! கட்சியைப் பிரிப்பது அல்லது பிரியத் தூண்டுவது இராசதந்திரம்!

● ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு — கிழக்கு மாகாண மக்கள் என்ன செய்வார்கள்; என்ன செய்யவேண்டும் என்பது இன்னமும் தெளிவாகவில்லை!

★ மருட்டலுக்கு எடுபடாமல் மிரட்டலுக்கு அடிபணியாமல், வாக்குகள் 'களவு' போகமுதல் ஏதோ ஒரு வகையில் அவற்றைப் பயன்படுத்துவது தான் நல்லதெனப் பலரும் சொல்லுகின்றனர்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடற்றொழிலாளர்களுக்கு உபகரணம் வழங்குவதற்கு நிதி

யாழ். மாவட்டத்தில் உள்ள கடற்றொழிலாளர்களுக்கு மானிய அடிப்படையில் கடற்றொழில் உபகரணங்களை வழங்குவதற்கென கடற்றொழில்அமைச்சினால்கடந்த வருடம் 11 லட்சம்ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இந்த நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்கள் 'மாஹோ' கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டு கடற்றொழிலாளர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதாக கடற்றொழில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை —

இவ்வருடம் மானியத்திட்டத்தின் கீழ் கடற்றொழில் அமைச்சினால் யாழ். மாவட்டத்துக்கு 20 லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

## கரோல் நிகழ்ச்சி

யாழ். மரியன்னை பேராலயப் பங்கிற்கு உட்பட்ட வலயங்களுக்கான கரோல் வாழ்த்துக் கீத நிகழ்ச்சியைப் பேராலய இளைஞர் உருவாக்கல் இயக்க இயக்குநர் எமில் போல் அடிகளார் தலைமையிலான பாடகர் குழுவினர் நடத்திவருகின்றனர். [ஐ-8]

ALL PURPOSE MULTI DIRECTIONAL

KOBE-52

TV/RADIO ANTENNA



பொருத்துவதற்கு இலகுவானது

- அனைத்து தொலைக்காட்சி சேவைகள்
- AM/FM வானொலி அலைகள்
- உட்பொருத்தப்பட்ட பூஸ்ட்டர்
- ஒரு பூஸ்டரிலிருந்து இரண்டு வெளியாக்கிகள்
- பணம் திரும்பத்தரும் உத்தரவாதம்

LANKA NIPPON
18, Keyzer Street, Colombo 11.
Tel: 437735, 324726
Fax : 437736
10, Trelawny Place,
(Behind Milk Bar)
Bambalapitiya Junction,
Colombo 4. Tel : 589992

AVAILABLE ISLANDWIDE

(சி/9859)

மாவை. கொல்லங்கலட்டி

## பின்னையார் கோயில்

### பெருங்கதை உற்சவமும் திருவெம்பாவை பூசையும்

14-12-99 செவ்வாய்க்கிழமை சதய நட்சத்திரமும் ஷஷ்டி திதியும் சேர்ந்த உத்தம நாளில் பெருங்கதை உற்சவம் நிகழும்.

காலை 8-00 மணி தொடக்கம் மகாகணபதி ஹோமம் ஆரம்பமாகி பிற்பகல் 1-00 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையும் திருவிழாவும் நடைபெறும்.

அன்று காலை தொடக்கம் திருவெம்பாவை பூசை ஆரம்பமாகி 10 நாள்களும் நடைபெறும்.

— அறங்காவலர்;

(71710)

## ஆயுர்வேத கல்லூரிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவ கல்லூரியினால் 2000 ஆம் ஆண்டு அனுமதிக்கான விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளன.

அனுமதிக்கான விண்ணப்ப இறுதி நாள் இம்மாதம்31ஆம் திகதி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## தொலைக் காட்சி வசதி

நல்லூர், டிசெ. 12

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சிரேஷ்ட பொது அறையில் தொலைக்காட்சிப் பெட்டி வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த்துறை விரிவுரையாளர் கி. விசாகரூபன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம் பிள்ளை இந்த தொலைக்காட்சிச் சேவையை தொடக்கி வைத்தார்.

(ஐ-103)

## ஐஸ்பழ தொழிற்சாலையில் திருட்டு

நெல்லியடி, டிசெ, 12

ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த நேரம் பார்த்து ஐஸ்பழத் தொழிற்சாலைக்குள் புகுந்த திருடர்கள், அங்கிருந்து புதியசைக்கிள்,பணம், உடுபுடைவைகள் போன்றவற்றை அபகரித்துக்கொண்டு தலைமறைவானார்கள்.

இந்த திருட்டுச் சம்பவம் புலோலியிலுள்ள மாதனைப் பகுதியில் இருக்கும் "ராஜகௌரி" ஐஸ்பழத் தொழிற்சாலையில் இடம்பெற்றது.

அங்கு பணி புரியும் ஊழியர்கள் அனைவரும் நித்திரையில் இருந்த சமயமே இத் திருட்டு இடம்பெற்றது. 7 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய சைக்கிள்ஒருவரின் சேட் பொக்கற்றிலிருந்து 650 ரூபா பணம் மற்றும் சேட்டுகள், சாரங்கள் போன்றவற்றுடன் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐஸ்பழ வானிலிருந்து பெருமளவு ஐஸ்கிறீம் வகைகளையும், அபகரித்துக் கொண்டு சென்று விட்டனர்.

இது குறித்துஐஸ்பழக்கடை உரிமையாளர் பருத்தித்துறை பொலீஸ்நிலையத்தில் புகார்செய்துள்ளார் [ஐ-109]

உ
கணபதி துணை

## விவாக சுபமுகூர்த்த அழைப்பு

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் மங்களகரமான பிரமாதி வருஷம் கார்த்திகை மாதம் 26ஆம் திகதி (12-12-1999) ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணி முதல் 9.15 மணி வரையுமுள்ள பூர்வபக்ஷ சதுர்த்தி திதியும் திருவோண நட்சத்திரமும் அமிர்த யோகமும் கூடிய தனு லக்கின சுபமுகூர்த்தத்தில்

பலாலி
ச. சுப்பிரமணிய ஐயர் தம்பதிகளின்
பௌத்திரனும்
எமது புத்திரனுமாகிய
சிரஞ்சீவி
**நடராஜஐயருக்கு**

காரைநகர் களபூமி
தன்னைப் பிள்ளையார் கோயில்
பிரம்மஸ்ரீ குமாரசாமிஐயர் தம்பதிகளின்
பௌத்திரியும்
எமது புத்திரியுமாகிய
சௌபாக்கியவதி
**சுவர்ணாவை**

கன்னிகாதான மாங்கல்யதாரண, பாணிக்கிரஹணம் செய்ய வவுனியா புளியடி சித்தி விநாயகப் பெருமானுடையதும் மட்டக்களப்பு எல்லை வீதி சிந்தாமணிப் பிள்ளையாரினதும் திருவருள் துணையுடன் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு மேற்படி சுபமுகூர்த்தத்தில் மட்டக்களப்பு அருள்மிகு ஆனைப்பந்தி ஸ்ரீ சித்திவிக்னேஸ்வரர் ஆலய மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் இஷ்டமித்திர குடும்ப சமேதராக வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

சமாவர்த்தனம் 11-12-99 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் மணமகனில்லத்தில் நடைபெறும்.

சுபமங்களம்!

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:

பிரம்மஸ்ரீ
சு. சதாசிவஐயர் -ஜானகி தம்பதிகள்
143/30, எல்லை வீதி,
மட்டக்களப்பு.

பிரம்மஸ்ரீ
கு. கணேசக்குருக்கள் -ஜெயலக்ஷ்மி தம்பதிகள்
51, குருமன்காடு,
வவுனியா.

★ இரு வீட்டார் அழைப்பு ★

(71701)

# பயணப் பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டோரின் விவரம்

யாழ்ப்பாணம், டிசெ. 12

யாழ். குடாநாட்டில் இருந்து வெளி இடங்களுக்கு பயணம்செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் — உதயனில் வெளியாகி வருவது தெரிந்ததே.

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம் மாதம் 8 ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சங்கானை

(121559ஏ], [125232ஏ], [125235ஏ], [125235பி], [125235சி], [125235டி), (125258ஏ), (125258பி), (125362ஏ), (125429ஏ), (127032ஏ), (127033ஏ), (127134ஏ), (127196ஏ), (127287ஏ), (127297ஏ), (127297பி), (127351ஏ), (127449ஏ), (127458ஏ), (127458பி, (127459ஏ).

### யாழ்ப்பாணம்

(124712ஏ), (124712பி), (126042ஈ), (126706ஏ), (126706பி), (126809ஏ), (126809பி), (126809சி), (126886ஏ), (126886பி), (126898ஏ), (126886சி), (126898பி), (126942ஏ), (126942பி), (126942சி), [126942டி), (126976ஏ). [133018ஏ], [133345ஏ], [133361ஏ], [133362ஏ], [133390ஏ]. [133401ஏ], [133410ஏ], [133410பி], [133411ஏ], [133411பி], [133441ஏ], 133459ஏ).

### கரவெட்டி

[118971ஏ], [118971பி] [122207ஏ], [122327ஏ], [125525ஏ], [125525பி], [125545ஏ), [125550ஏ], [125559ஏ], [125564ஏ], [125670ஏ], [125670பி], [125670சி], [125721ஏ], [125721பி], [125827ஏ], [125827பி], [125827சி], [125827டி], [125894ஏ], [125894பி], [125898ஏ], [132578ஏ], [132750ஏ], [132758ஏ], [132758பி].

### கோப்பாய்

[121079ஏ], [121103ஏ], (121144ஏ), [124070ஏ], (124074ஏ,] [124075]ஏ, [124077ஏ], [124078ஏ], [124121ஏ], [124140ஏ], [124165ஏ], [124165பி] [124171ஏ], [124174ஏ], [124174பி], [124174சி], [124187ஏ].

### நல்லூர்

[124566ஏ], [112778ஏ], [117035ஏ], [117035பி], [117380ஏ], [123419ஏ], [123419பி] [123419சி], [123419டி], [123435ஏ]. [123435பி], [123435சி], [123435டி], [124985ஏ], [125117]ஏ, [125117பி], [125303ஏ], [125303பி], [125303சி], (125303பி), (127081ஏ). (127101ஏ), (127127ஏ), (127254ஏ), (127254பி), (127255ஏ), (127361ஏ), (127376ஏ), (127410ஏ), (127416ஏ), (127416பி) (127416சி), (127430ஏ), (134412ஏ), (134412பி),

### பருத்தித்துறை

(119975ஏ), (119976ஏ), (120104ஏ), (120104பி), (122234ஏ), (125633ஏ), (125634ஏ), (125634பி), (125634சி), (125634டீ), (125634ஈ) (125700ஏ), (125700பி), (125700சி), (125773ஏ), (125858ஏ), (125858பி), (125858சி), (125866ஏ), (125866பி),(125866சி) (125908ஏ), (125927ஏ), (125927பி), (125927சி), [132520ஏ], [132520பி], 132567ஏ]

### சண்டிலிப்பாய்

[123424ஏ], [125021ஏ], [125021பி], [125023ஏ], [125078ஏ], [125087ஏ], [125087பி], [127150ஏ], [127150பி], [127171ஏ] [127203ஏ], [127222ஏ], [127222பி], [127223ஏ], [127224ஏ], [127226ஏ], [127252ஏ], [127277ஏ], [127277பி], [127277சி] [127360ஏ], [127480ஏ] [127480பி]

### தெல்லிப்பழை

(121237ஏ),, (125077ஏ), (127344ஏ), (127344பி),

### உடுவில்

(123815ஏ), (133427ஏ), (123427பி), (123427சி), (124977ஏ), (124977பி), (125052ஏ), (125127ஏ), (125127பி), (125277ஏ), (125392ஏ), (125392பி), (125402ஏ), (127056ஏ), (127064ஏ), (127064பி), (147076ஏ), (127148ஏ), (127148பி), (127149ஏ). (127149பி), (127149சி), (127169ஏ), (127169பி), (127237ஏ), (127335ஏ), (127357ஏ)' (127357பி), (134501ஏ).

பயண அனுமதி வழங்கப் பட்டவர்களின் (இம் மாதம் 9 ஆம் திகதி வரை)பதிவு இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக வருமாறு:-

### சாவகச்சேரி

(127224ஏ), (126267ஏ), (126267பி), (126289ஏ), (126289பி), (126289சி), (126299ஏ), (126319ஏ), (126419ஏ), (126420ஏ). (126438ஏ), (126440ஏ), (126444ஏ), (126447ஏ), (126447பி), (126449ஏ), (126450ஏ), (126450பி), (126453ஏ), (126453பி), (126457ஏ), (126457பி), (126457சி), (126460ஏ), (126460பி), (126466ஏ) (126469ஏ), (126471ஏ)' (126472ஏ), (126473ஏ)' (126487ஏ), (126491ஏ),' (126491பி), (126491சி), (126032ஏ), (126032பி), (126045ஏ), (126045பி), (126077ஏ), (126079ஏ), (126082ஏ), (126082பி). (126105ஏ), (126105பி)' (126105சி), (126105டி), (126105ஈ).

### கரவெட்டி

[119971ஏ], [122024ஏ], [122024பி], [122048ஏ], [122217ஏ], [122217பி], [125622ஏ], [125622பி], [125622சி], [125622டி], [125674ஏ], [125681ஏ], [125707ஏ], [125719ஏ], [125719பி], [125730ஏ], [125732ஏ], [125734ஏ], (125734பி], [125734சி], [125734டி], [125734ஈ], [125797ஏ], [125797பி], [125991ஏ], [125991பி], [132518ஏ], [132775ஏ], [132919ஏ].

### பருத்தித்துறை

[122163ஏ], [125571ஏ], [125770ஏ], [125788ஏ], [125788பி], [125810ஏ], [125863ஏ], [125863பி], [132845ஏ], [132856ஏ], [132885ஏ].

அனுமதி வழங்கப்பட்டவர்களின் [இம் மாதம் 10 ஆம் திகதி வரை ]பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### யாழ்ப்பாணம்

(124744ஏ), (126004டி), (126004ஈ, (126004எவ்), (126077ஏ), (126573ஏ), (126573பி), (126602ஏ), (126701ஏ), (126773ஏ), (126780ஏ), (126817ஏ), (126817பி), (126843ஏ), (126843பி), (126843சி), (127004பி) (127004சி), (127006ஏ), (127006பி), (127006சி), (127906டி), [127006ஈ], [133313ஏ], [133315ஏ], 133315பி], [133315சி], [133327ஏ], [133332ஏ], [133332பி], [133335ஏ], [133359ஏ], [133384ஏ], [133400ஏ], [133482ஏ], [133482பி], [133486ஏ], [133486பி], 133489ஏ], [133489பி],

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# HARVEST

## ஹாவஸ்ட்

### புதுச்சுவை குன்றாத தேநீர்

மலையகத்தின்
பசுமையான
தோட்டங்களிலிருந்து
வரும் ஹாவஸ்ட்
தேயிலை...

நறுமணமும்
புத்துணர்வும்
தந்திடும் தேநீரை
நீங்கள் பருக
நுட்பமாகக் கலவை
செய்யப்பட்டுள்ளது.




**100 கிறும் பக்கெட்டுகளில் கிடைக்கும்**

Marketed by
***Burns Philp Lanka (Pvt) Ltd.***
124, Templers Road, Mt. Lavinia.

Stockist in Jaffna
**Jeyarasa & Company**
104. A, Stanley Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சி/10046)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சங்கம் ஒழுங்கை, சங்கத்தானை, சாவகச்சேரியைச் (சாவகச்சேரி இந்துக்கல்லூரி அண்மையில்) சேர்ந்த அருணாசலம் விக்கின விநாயகம என்பவரதுதேசிய அ. அட்டை (820840291V) விசேட அ. அட்டை (091032684) இரண்டும் 10 - 12 - 99 இல் கொடிகாமத்திற்கும் மீசாலைக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் தரப்படும். (71712)

### இறைச்சிக் கோழி

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள், [பாதிக் கோழி உட்பட] சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, [நல்லூர் வீடியோ சென்ரர் வளவு] முத்திரைச் சந்தையடி, நல்லூர். (71617)

இறைச்சிக்கோழி (Broilar), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக் கொள்ளலாம் தொடர்பு: இல 15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (சின்னக்கடை அருகில்) [71654]

இறைச்சிக்கோழி (Broiler) மற்றும் கல்பேடஸ் என்பன விற்பனைக்கு உண்டு தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும், தொடர்பு: இல 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம் (71707)

### கணிதம் 2000 ஆண்டு

O/L ஆண்டு 6 - 10 ஆரம்பத்திலிருந்து குறுகிய காலத்தில் முதலாம் தவணைப் பரீட்சையில் உயர்ந்த பெறுபேறடைய (ஆங்கிலமும்) கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc (Cey) 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் பின்புறமாக, திருநெல்வேலி. (71697)

ஆண்டு 4 விருந்து O/L வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 35 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் ஆரம்ப அறிவிலிருந்து 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடைய கற்பிக்கப்படும். க. ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி (71703)

### காணவில்லை

கறுப்பு நிறமுடைய Dash-Hound (டாஸ் கவுண்ட்) ஆண் நாய்க்குட்டி பெல்றுடன் காணவில்லை. இதைக்கண்டு பிடித்து தருபவர்கட்கு சன்மானம் வழங்கப்படும். 803, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [71711]

### இலகு திருமண சேவை

1966 உத்தராடம், யாழ். பிரபல நிறுவனக் காசாளருக்கும், 1952 பூராடம் Australia Computer, Sponser உள்ள மணமகனுக்கும் மணப்பெண்கள் தேவை. தொடர்பு ஞாயிறுகளில் துரைவிமலா, கே. கே. எஸ் வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (71699)

### சித்திவிநாயகர் சோதிடம்

சாதகம் எழுத பொருத்தம் பார்க்க அதிர்ஷ்டஎண் முறையில் பெயர் அமைக்க கிரகதோஷ யந்திரங்களுக்கு கொழும்பில் 32 வருட சோதிட அனுபவம் பெற்ற விஸ்வ பிரம்மஸ்ரீ மா. தங்கவேல் 9, டச்சுவீதி, சாவகச்சேரி (ஞாயிறு விடுமுறை) (71612)

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழி (கல்பேட்ஸ்) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். க. பரராஜசேகரம், நவாலி கிழக்கு, மானிப்பாய். (கிராம அலுவலர் காரியாலயம் முன்பாக) [71705]

சுன்னாகம் கிழக்கில் 3 பரப்புடன் 6 அறையும் இணைந்த குளியலறையுடனும் நீர்த்தாங்கியுடனும் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு தொடர்பு: திருமதி ச. இராசரத்தினம், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம். [71694]

Yamaha - PSR 520, PSS 390, Casio CTK 601, CA 110 Key Boards, Olympic Drumset, Congo Drum Yamaha DD 9(Electric Drum) ஆகிய இசைக்கருவிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 73, பழம் வீதி; கந்தர்மடம் அல்லது 23, குறோசற் லேன் சுண்டுக்குளி. (71640)

யமஹா ஓகன் 9 V உம், 2 நஷனல் பனசொனிக் ரேப் றேடியோக்களும் விற்பனைக்குண்டு. தொடர்பு: ப. ச யோகராஜா 'செங்கமலம்' அச்சுவேலி வடக்கு. (71716)

## ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் வ - து
# பதவி வெற்றிடம்

**கிளை முகாமையாளர்:**

மேற்படி பதவிக்கு சங்க எல்லைப்பரப்பில் நிரந்தரமாக வசிப்பவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் சொந்தக் கையெழுத்தில் பூர்த்தி செய்து 'பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப. நோ கூ. சங்கம், ஊர்காவற்றுறை' என்ற முகவரிக்கு 25 - 12 - 99-க்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத்தபாலிலோ ஒப்படைத்து உறுதிப்படுத்தவும்.

**தகைமைகள்:**

1) கல்வித்தகைமைகள்: கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணம்) தராதரப் பத்திரம் / க. பொ. த. (சாதாரண தராதரப் பத்திரம், எண்கணிதம் / வர்த்தக கணிதம் / தூய கணிதம். தமிழ் பாஷை உள்ளடக்கியதாக ஆறுபாடங்களில் ஒரே தடவையில் சித்தி

அல்லது

2) கூட்டுறவுப் பணியாளர், 15 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்கு குறையாத அனுபவம்
வயது: 25 — 50

சம்பளம்: கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழு சுற்று நிருபத்திற்கமைய
2650 — 3750
50/10 — 60/10

பிணை: சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட காசுப்பிணை, உறுதிப்பிணை செலுத்தப்பட வேண்டும்.

பொது முகாமையாளர்
ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம்.
ஊர்காவற்றுறை. 10-12-99, (சி/10185)

# தையல் பயிற்சி ஆரம்ப விழா

கோப்பாய் தெற்கு கட்டப்பிராய் மாதர் கிராம அபிவிருத்திச்சங்கம் பெண்களுக்கான இலவச தையல் பயிற்சியை ஆரம்பிக்க உள்ளது. இப்பயிற்சி நெறியின் தொடக்க விழா எதிர்வரும் புதன்கிழமை காலை 10 மணிக்கு சங்க மண்டபத்தில் சங்கத் தலைவி திருமதி அ. ஸ்ரீபதி தலைமையில் இடம் பெறும்—

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாகவலி. கிழக்கு பிரதேச செயலாளர் க. கேதீஸ்வரனும். வலி. கிழக்கு பிரதேச சபையின் தலைவர் பூ. குணசிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். [ஐ 180]

# 21 ஆம் நாள் நினைவஞ்சலி

எமது சங்கத்தின் ஆரம்பகால உறுப்பினரும்,
முகாமையாளரும் ஆலோசகருமான
**திருமதி செல்வராணி நவரெத்தின சாமி**
என்பவரது பாசமிகு கணவர்
## கந்தன் நவரெத்தினசாமி

சுவிற்ஸர்லாந்தில் காலமானதையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைச் சங்கத்தின் சார்பில் காணிக்கை ஆக்குவதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக நயினை ஸ்ரீ. நாகபூஷணி அம்பிகையைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாகிகளும், உறுப்பினர்களும்.
கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம,
நயினாதீவு வடக்கு.
கிராம அலுவலர் பிரிவு J / 34,
நயினாதீவு.

(71722)

# பாராட்டு விழா

## யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

மேற்படி பாடசாலை ஆண்டு 5 இல் கல்விகற்று 1999 ஆம் ஆண்டுபுலமைப்பரிசில் பரீட்சையில்சித்தியடைந்த பின்வரும் மாணவிகளைப் பாராட்டுகிறோம். அத்துடன் மேற்படி மாணவர்களின் பெறுபேறுகளுக்காக ஆக்கமும் ஊக்கமும் அளித்த அதிபர் ஆசிரியர்களையும் மனதாரப் பாராட்டுகின்றோம்.

| | மாணவிகளின் பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | வினோதா யோகசுந்தரம் | 161 |
| 2. | விதுஷா ரவிராஜன் | 161 |
| 3. | குவலயா ஸ்ரீதரன் | 158 |
| 4 | சிந்துஜா பத்மநாதன் | 157 |
| 5. | சஸ்வஜனனி கருணைலிங்கம் | 149 |
| 6. | தாட்சாயணி ராஜபாலன் | 149 |
| 7. | லதாங்கி மெய்யழகன் | 144 |
| 8. | சங்கீதா புஷ்பராஜா | 142 |
| 9 | கஸ்தூரி அரசரட்ணம் | 141 |
| 10. | காரணி ஜெயராஜா | 139 |
| 11. | துளசிவந்தனா மகேந்திரன் | 138 |
| 12. | சிந்துகா செல்லத்துரை | 135 |
| 13. | கார்த்திகா அமிர்தலிங்கம் | 134 |
| 14. | தனுசியா திரிபுரநேசன் | 134 |
| 15. | கிருஷ்ணஜெயந்தி ராதாகிருஷ்ணன் | 134 |
| 16. | அமிர்தவர்சினி ஸ்ரீகாந்தன் | 131 |
| 17. | நிரஜா பஞ்சலிங்கம் | 129 |
| 18. | டிலுக்சா சரவணமுத்து | 128 |
| 19. | சுலக்சி கங்காதரன் | 127 |
| 20. | ரேணுகா ராமராஜ் | 126 |
| 21. | சர்மியா கிட்னேஸ்வரன் | 125 |
| 22. | பிரதாயினி தனபாலன் | 124 |
| 23. | சரண்யா சிறிவரதன் | 123 |
| 24 | ஜெகதா சந்திரன் | 123 |
| 25. | மயூரி லிங்கேஸ்வரன் | 121 |
| 26. | சுயா பத்மநாதன் | 121 |
| 27. | பர்சிகா சற்குணராஜா | 120 |
| 28. | ஜென்னி யோன்பீற்றர் | 119 |
| 29. | சகிதா தர்மராஜா | 118 |
| 30. | துசிதா சிவானந்தராஜா | 118 |
| 31. | தர்மதா விக்னேஸ்வரன் | 118 |

மாணவர்களைப் பாராட்டும் விழாவும்
ஆசிரியர்களைக் கௌரவிக்கும் விழாவும்
ஷெ கல்லூரி மண்டபத்தில் 99-12-12 ஞாயிறு பி. ப.2.30 மணிக்கு கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெறும்.
பிரதம விருந்தினராக
யாழ் பல்கலைக்கழக வரலாற்றுத்துறை
பேராசிரியர் எஸ். சத்தியசீலன்
கலந்து கொண்டு சிறப்பிப்பார்.

[72715] - பெற்றோர்.

## சாவகச்சேரி பிரதேச சபை
## 2000 ஆம் ஆண்டுக்கான
# மீள் கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திரம் விநியோகித்தல்:- 13 - 12 - 99 — 15 - 12 - 99 ஆம் திகதி நண்பகல் 12 - 00 மணி வரை

கேள்விப் பத்திரம் ஏற்கும் திகதியும் நேரமும்:- 16 - 12 - 99 ஆம் திகதி நண்பகல் 10 - 00 மணி வரை.

கேள்வி திறக்கும் திகதியும் நேரமும்:- 16 - 12 - 99 ஆம் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு

இக் கேள்வி தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

| இல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | கொடிகாமம் சந்தை மாட்டிறைச்சிக்—கடை | 40,000/- | 500/- | 250/- |
| 2. | கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை. | 7,000/- | 250/- | 150/- |
| 3. | மிருசுவில் சந்தைமாட்டிறைச்சிக் கடை. | 7,000/- | 250/- | 150/- |
| 4. | வரணி மாட்டிறைச் சிக் கடை. | 5,000/- | 200/- | 150/- |
| 5. | கைதடி - நுணாவில் மாட்டிறைச்சிக் கடை. | 15,000/- | 500/- | 150/- |
| 6. | கைதடி மாட்டிறைச்சிக் கடை. | 20,000/- | 500/- | 150/- |
| 7. | கைதடி ஆட்டிறைச்சிக் கடை. | 20,000/- | 500/- | 150/- |

அன்ரன் பொன்னையா
தலைவர்

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம். 10 -12 - 1999 (சி-10182)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊனமுற்றோர் தினவிழா

சர்வதேச ஊனமுற்றோர் தினத்தையொட்டித் தென்மராட்சி பிரதேசசெயலக சமூக சேவைகள் பிரிவினா நடத்தும் ஊனமுற்றோர் தின விழா இன்று காலை 10-00 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும். ஊனமுற்றோர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறும் [உ-117]

## புலோலி இளைஞன் கொலை வழக்கு
# விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நால்வரில் ஒருவருக்குப் பிணை

நெல்லியடி, டிசெ 12

கரவெட்டி மேற்கைச் சேர்ந்த இராஜரத்தினம் இராஜேஸ்வரன் (வயது 22) என்ற இளைஞர் கடந்த பெப்ரவரியில் தலை துண்டிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த புளொட் உறுப்பினர் நால்வரில் ஒருவர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சபாபதிப்பிள்ளை ஜெயச்சந்திரன் (வயது 30) என்பவரே தலா 15 ஆயிரம் ரூபா வீதம் இருவரது ஆள்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

மேற்படி படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு கடந்த புதனன்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் பதில் நீதிவான் அ க நடராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி எஸ். ஸ்ரீஸ்கந்தராஜாவின் பணிப்புரையின் பேரில் ச. ஜெயச்சந்திரன் என்பவரை ஆள்பிணையில் விடுதலை செய்வதாக அறிவித்தார்.

குறித்த இளைஞர் இரண்டு கிழமைகளுக்கு ஒரு தடவை (ஞாயிற்றுக்கிழமைகளில்) நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் கையொப்பம் இட வேண்டும் எனவும் —

இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட சாட்சிக்காரர்களை அச்சுறுத்தல் செய்து, அவர்களுக்கு ஏதாவது இடையூறு விளைவித்தால் உடனடியாக பிணை ரத்துச் செய்யப்படும் என்றும்

பதில் நீதிபதி அறிவித்தார்.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ஏனைய மூன்று புளொட் உறுப்பினர்கள் சம்பந்தமாக, அறிவித்தல் எதுவும் மேல்நீதிமன்றத்தால் வழங்கப்படாமையால் தொடர்ந்து இருவாரகாலம் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார். (ஐ-7-109)

# மார்கழி மாதம்...

(ஏழாம் பக்கத் தொடர்)

பெறுவதாகும். இவ்விழா சிவபெருமானுக்குப் பொதுவகையால் சிறந்ததாயினும் அப்பெருமானது அருள்மூர்த்தங்களுள் நடராஜ மூர்த்திக்கே மிகச் சிறப்புடையதாகும்.

ஊர்திரை வேலை
யுலர்வு முயர்மயிலைக்
கூர்தருவேல் வல்லார்
கொற்றங்
கொள்சேரிதனில்
கார்தரு சோலைக்
கபாலீச்சரமமர்ந்தான்
ஆதிரைநாள் காணாதே
போதியோ பூம்பாவாய்.

இங்கே திருவாதிரை விழாவினைக் காண்பது மனிதப் பிறவியின் நோக்கம் என்று கூறிப் பூம்பாவையை அழைக்கிறார் திருஞானசம்பந்தர்.

துன்ப நும்மைத் தொழாத
நாள்களென்பாரும்
இன்ப நும்மை யேத்துநாள்க
ளென்பாரும்
நும்பி னெம்மை நுழையப்
பணியே யென்பாரும்
அன்ப னாரு ராதிரை
நாளாவது வண்ணம்

என்று திருஞானசம்பந்தப் பெருமானுக்கு ஆளுடைய அரசர் திருவாரூர்த் திருவிழாச் சிறப்பை உணர்த்துகிறார்.

திருவாரூரில் வன்மீகநாதரை வழிபட்டு திருப்புகலூரை நோக்கி வரும் திருநாவுக்கரசு நாயனாரை எதிர் கொண்டழைக்கின்ற சம்பந்தப் பெருமான், திருவாரூரில் தொழுது அனுபவித்த தன்மையைக் கேட்கின்றார். இது தொடர் பாகச் சேக்கிழார் சுவாமிகள் ''செப்பிய வண்டமிழ் மாலையாலே திருவாதிரை நிகழ் செல்வம் சொன்னார்'' என்று நாவரசர் கூறியருளிய திறத்தைக் கூறுகின்றார்.

### ஈழத்துச் சிதம்பரத்தில்

திருவாதிரை விழா மேற்படி செய்யுளில் செல்வம் என்று கூறப்பட்டிருக்கின்றது இச்செல்வம் மற்றைய எல்லாச் செல்வங்களிலும் தலையாயது; நிலைபேறானது; கண்ணால் அனுபவிக்கப்படுவது இவ் விதமான பெருஞ்சிறப்புடைய திருவாதிரை விழா, கூத்தப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுள் மேம்பட்டதாகிய சிதம்பரத்தில் மிக மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. அங்கு நடைபெறுவது போலவே ஈழத்துச்சிதம்பரத்திலும் நடைபெற்று வருவது மகிழ்ச்சிக்குரியது

திருவாதிரை விழாவின் ஒன்பதாம் நாள் ஈழத்துச் சிதம்பரத்தில் தேர்த் திருவிழா நிகழும். அந்தணர்கள் வேதமும் அடியார்கள் திருமுறையும் ஓத, பக்தர்கள் பஜனை பாட, சங்கு முழங்க, சேமக்கலமும் மேள வாத்தியங்களும் ஒலிக்க, செவ்வந்திப் பூக்களாலும் திருவாபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்ட நடராஜப் பெருமான், திருநடனம் ஆடிக்கொண்டு சிவகாமசுந்தரி அம்மையாருடனும், விநாயகர் ஐயனார், முருகன், மாணிக்கவாசகர் என்னும் மூர்த்திகளுடனும் 9 மணிக்குத் தேருக்கு எழுந்தருளுங்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இதனைக் கண்டுகளிக்கவும், பெருமானின் அருளைப் பெறவும் ஈழத்தின் பல பாகங்களிலுமிருந்தும் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் ஈழத்துச் சிதம்பரத்துக்கு ஆண்டுதோறும்வந்து கொண்டிருகிறார்கள். நடேசப் பெருமானும் ஏனைய மூர்த்திகளும் ஐந்து தேர்களில் வீதி வலம் வரும் காட்சி ஒரு தனிச் சிறப்பினையுடையது பிற்பகல் மூன்று மணிக்கு நடேசப் பெருமான் தனது இருப்பிடத்தை அடைவார். இரவு இரண்டு மணிக்கு மூலமூர்த்திகளாகிய சிவன் அம்மன் ஐயனார் என்பார்க்கு அபிஷேகம் ஆரம்பமாகி நடைபெறும். இதனைத்தொடர்ந்து மூன்று மணிக்கு வசந்த மண்டபத்தில் நடேசப் பெருமானுக்கும் சிவகாமசுந்தரி அம்பாளுக்கும் திருவாதிரை அபிஷேகம் ஆரம்பமாகும். ஏறத்தாழ மூன்று மணித்தியாலங்கள் நடைபெறும் இந்த அபிஷேகம் ஒப்பற்ற சிறப்பினை உடையது

இது போன்று சிறப்பாக ஈழத்தில் வேறு எங்கும் அபிஷேகம் நடைபெறுவதில்லை எனலாம். இந்த அபிஷேகத்தைப் பல்லாயிரக்கணக்கான அடியார்கள் கண்டு பேரானந்தம் அடைவர் சூரிய உதயத்தில் திருவாதிரைத் தரிசனம் நிகழும். பின்னர் 4 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும்.

''தாய் நாட்டுத் தமிழ் மக்கள், இந்தத் தில்லையாம் சிதம்பரத்தை நினைந்து நினைந்து மகிழ்ந்தால், சேய் நாடான ஈழத்து மக்களும் காரைநகர் என்னும் ஈழத்துச் சிதம்பரத்தை நினைந்து நினைந்து மகிழலாமன்றோ. அங்கு நடக்கும் திருவெம்பாவைத் திருவிழா, மணிவாசகர் விழா என்பன ஈழத்தில் நிலைத்திருக்கும் சைவ உணர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன என்று நான் சொன்னால் அதுமிகை ஆகாதல்லவா'' என்று தமிழ் நாட்டிலிருந்து ஈழத்துச் சிதம்பரத்துக்கு வருகைதந்து நடேசப் பெருமானை வழிபட்டுச் சென்ற பேரறிஞராகிய திரு. தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் கூறியிருப்பது இப்பொழுது நினைவு கூரப்படக் கூடியது ★

## ஆங்கில மூலம் விரிவுரை

யாழ் பல்கலைக்கழக முகாமைத்துவ வர்த்தக பீடத்திற்கு புதிய கல்வியாண்டு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான கற்கை நெறிகள் யாவும் ஆங்கில மொழிமூலம் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பீடத்திற்கு 200 மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பீடாதிபதி எம். நடராஜசுந்தரம் தெரிவித்தார்.

ஆங்கில மொழி மூலம்நடைபெறும் இந்தக் கற்கை நெறிகளில் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## மலசலகூடம் அமைப்பு

யுனிசெவ் நிதி உதவியுடன் குருநகர் பகுதியைச் சேர்ந்த யாழ். மாநகரசபையின் சுகாதாரத் தொழிலாளிகள் 23 பேருக்கு மலசலகூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது

தலா 12 ஆயிரம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள மலசலகூடங்கள் கட்டும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. [3-10]

# கோப்பாய்ப் பிரதேசத்துக்கு மாத இறுதிக்குள் மின்சாரம்

கோப்பாய்ப் பிரதேசத்தில் மின்சாரம் வழங்கப்படாத பகுதிகளுக்கு இம்மாத இறுதியில் மின்சாரம் வழங்கப்படவுள்ளது

இப்பகுதியில் உள்ள பொது அமைப்புக்கள் இது தொடர்பாக இலங்கை மின்சாரசபை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டபோது இப்பகுதிக்கு இம்மாத இறுதிக்குள் மின்சாரத்தினை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மின்சாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை வீதியில் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி வரையே தற்போது மின் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.


## ஆண்டு இறுதி விடுமுறைக்காலம் சிறுவர்களுக்கு சிறந்த கிறிஸ்மஸ் பரிசு

- அறிவியல் கட்டுரைகள்
- விறுவிறுப்பான கதைகள்
- கருத்துமிக்க கவிதைகள்

கண்ணைக் கவரும் படங்களுடன்...
பிரமிக்க வைக்கும் பரிசுப் போட்டிகள்!

**அர்ச்சுனா**

உங்கள் பிரதிகளை இப்போதே பதிவுசெய்து விடுங்கள்


## மாவட்ட நீதிமன்றம் பருத்தித்துறை

வழ. இல: 139/TR

1) ஆழ்வார் அல்லது ஆழ்வாப்பிள்ளை தம்பிராசா,
கரவெட்டி கிழக்கு.
2) சின்னத்தம்பி விசுவநாதன்,
துன்னாலை மேற்கு.
3) நடராசா கைலாயர்
துன்னாலை மேற்கு.
4) சிதம்பரப்பிள்ளை கனகசபை,
துன்னாலை மத்தி.
5) கணபதிப்பிள்ளை கதிரவேலு,
கரவெட்டி கிழக்கு.
6) வேலுப்பிள்ளை நேசரத்தினம்,
கரவெட்டி கிழக்கு
7) சின்னத்தம்பி சிதம்பரநாதன்,
துன்னாலை மேற்கு.

— வழக்காளிகள்

எதிர்:

1) செல்லையா இராசதுரை,
கரவெட்டி கிழக்கு
2) அருளப்பா ஈஸ்வரதேவன்,
கரவெட்டி கிழக்கு.
3) மாணிக்கம் நமசிவாயம் [இறப்பு],
கரவெட்டி கிழக்கு.
3) ஏ. சுந்தவனம் வேலாயுதம்,
கரவெட்டி கிழக்கு
4) கனகசபை வேலாயுதபிள்ளை,
கரவெட்டி கிழக்கு.
5) செல்லத்துரை நந்தகுமார்,
துன்னாலை தெற்கு.

— எதிராளிகள்

கட்டைவேலிக் கோயிற்பற்று நுணுவில் குளக்கோட்டு விநாயகர் ஆலயம் சம்பந்தமாக வழக்கொன்று இந்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது இவ்வாலயத்தில் அக்கறையுள்ளோர் கட்சிக்காரராக சேர்ந்து உரிமைக்கோரிக்கை அணைக்க விரும்பின் 24 ஆம் திகதி தை மாதம் 2000 ஆண்டுக்கு முன்பு கட்சிக்காரராக சேர்ந்து உரிமைக்கோரிக்கை அணைக்க அனுமதிக்கப்படுவீர்.

மன்றின் கட்டளைப்படி.

ம. செல்வரத்தினம்,
பதிவாளர்,
பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம்.


வரைபு.
அ க நடராசா,
வழக்காளிகள் சட்டத்தரணி. (சி/10184)




## அன்பிற்கினிய மக்களே!

ஜனாதிபதிப் பதவி என்பது இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் அதிமுக்கியத்துவம் வாய்ந்தது. எனவே அதை எமக்குச் சாதகமானதாக ஆக்குவதுதான் விவேகமானது. வாக்களிப்பீர் சந்திரிகாவிற்கு.

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி**



**1**

(71726)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூர்த்தி உத்தியோகத்தர் நியமனம் 283 பேருக்கு!

யாழ்ப்பாணம், டிசெ 12

யாழ். மாவட்டத்தில் சமூர்த்தி ஊக்குவிப்பாளராகக் கடமையாற்றிய 283 பேருக்கு சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தின் 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் சமூர்த்தி ஊக்குவிப்பாளர்களாக ஏற்கனவே நியமனம் பெற்றுக் கடமையாற்றி வந்தவர்களே சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்

இதுவரை காலமும் இவர்கள் சமூர்த்தி அமைச்சின் கீழ் உள்ள சமூர்த்தி ஆணையாளரின் கீழ் பணியாற்றி வந்தனர்.

டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் இவர்கள் சமூர்த்தி அதிகார சபையின் கீழ் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் அனைத்தும் யாழ் செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவை நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் செயலகத்தில் வைத்து உரியவர்களுக்கு வழங்கப்படவுள்ளதாக யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-9)

# மக்களிடம் வகையாக மாட்டிக் கொண்ட திருடன்

யாழ்ப்பாணம், டிசெ 12

ஊரடங்கு நேரத்தில் வீட்டிற்குள் நுழைந்து திருட முயன்ற திருடர்களில் ஒருவன் அப்பகுதிப் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டான்.

யாழ். கடையிற் சுவாமி கோயில் ஒழுங்கையில் நேற்று முன் தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ஆசிரியர் ஒருவரின் வீட்டிற்கு சென்று வீட்டின் வெளியில் இருந்த 'லைற்றுக்களை, கழற்றி வைத்து விட்டு வீட்டு ஜன்னலை உடைத்து உள்நுழையமுயன்றதாகவும்—

சத்தம் கேட்டு வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டதை அடுத்து திருடர்கள் தப்பியோடி விட்டதாகவும்— தெரிவிக்கப்பட்டது.

அங்கிருந்து தப்பிச் சென்ற திருடர்கள் அருகில் இருந்த வீடு ஒன்றினுள் நுழைந்து சைக்கிள், பணம், உடுபுடவை என்பவற்றை திருடிக் கொண்டுவெளியேறும் போது விழித்துக் கொண்ட வீட்டுக்காரர் கூச்சலிட்டார். அதை அடுத்து அப் பகுதி மக்கள் விழித்தெழுந்து திருடர்களில் ஒருவனை மடக்கிப் பிடித்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

பிடிக்கப்பட்ட திருடன் நாவலர் வீதியில் உள்ள மின் கம்பம் ஒன்றில் கட்டி வைக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டான். அவனிடம் இருந்து தேசிய அடையாள அட்டை மற்றும் அண்மையில் நீதிமன்றத்தால் 10 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டதற்கான பற்றுச் சீட்டு என்பன பறிமுதல் செய்யப்பட்டன பின்னர் அவை கிராம அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டன.

இது தொடர்பாக வீட்டுக்காரர்களால் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது (உ-9)

## மருத்துவ...

(முதலாம் பக்கத் தொடர்)

அடுத்த ஆண்டு முதல் பரீட்சையில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பொதுப்பல்தேர்வு வினாக்கள் முறைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதற்காகவும் —

இந்த மறியல் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (உ-6)


## Wanted - Secretary

A well established firm is looking for a dynamic and experienced Secretary to the Managing Director in Colombo.

If you are above 35 years and have talents and skills, send your curriculum vitae before 15-12-99.

The applicant should be well competent in English and conversant in the other two languages.

Lodging and food will be provided Salary negotiable.

Advertiser ADVT - No. 982
C/O UTHAYAN
361, Kasturiar Road.
Jaffna.

## அச்சக வெற்றிடங்கள்

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் அச்சகம் ஒன்றுக்கு பின்வரும் பதவிகளுக்கு அனுபவம் உள்ளவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகள் தமது முழுமையான சுய விவரங்களை இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும். ''ஒவ்செற்'' அச்சக வேலைகளில் முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப் பெயரைக் குறிப்பிடவும்.

1. நிர்வாக அலுவலர்
2. அச்சக முகாமையாளர்
3. முகாரி (Foreman)

விளம்பரதாரர்:

விளம்பர இல. 981,
மே/பா. உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# திறப்பு விழா

சண்டிலிப்பாய், டிசெ 12

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் புதிதாக நிறுவப்பட்ட பாடசாலைக் கட்டட திறப்பு விழாவும் ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் புதிதாக நிறுவப்பட உள்ள கட்டடத்திற்கான அடிக்கல் நடும் நிகழ்வும் இன்று காலை நடைபெற உள்ளது.

கல்லூரி அதிபர் நா. சண்முக சுந்தரம் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயகல்விப் பணிப்பாளர் வி இராசையாவும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட கல்வித் திணைக்கள பொறியியலாளர் ஜி. சிவபாலனும் சிறப்பு விருந்தினராக சண்டிலிப்பாய் கல்விக்கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் கே. தனபாலசிங்கமும் கலந்து கொள்வார்கள். [உ-135]

## வெற்றிலைக்கேணி...

[முதாலம் பக்கத் தொடர்]

ளப்பட்ட '' ஓயாத அலைகள் — 3 '' நடவடிக்கையின் அடுத்த கட்டம் வன்னியின் வடமுனையில் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள புலிகள் இச்சமர் குறித்து மேலதிக விவரங்களை நேற்றிரவு வரை வெளியிடவில்லை.

புலிகளின் தாக்குதலை முறியடித்து பலத்த எதிர்த் தாக்குதலை நடத்திய படையினர் புலிகளைப் பின்வாங்கச் செய்திருப்பதாகப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்தது.

இந்தச் சமர் தரையில் வெடித்த சமயம் இப்பிரதேசத்தின் தெற்குப் பகுதி ஊடாகத் தாக்குதல் நடத்திக் கொண்டு கடல்வழியே தரையிறங்குவதற்குக் கடற்புலிகள் முயற்சித்ததாகவும்

அம் முயற்சியும் முறியடிக்கப்பட்டதாகவும் —

அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

கடற்படையினர் மற்றும் விமானப் படையினருடன் சேர்ந்து இராணுவத்தினர் கூட்டாகப் பதில் தாக்குதலில் ஈடுபட்டதாகவும் —

புலிகள் தரப்பில் இருநூறுக்கு அதிகமானோர் உயிரிழந்ததாகவும் —

இராணுவ அதிகாரி ஒருவர் சொன்னார். தங்கள் தரப்பில் இழப்புக்கள் மிகக்குறைவு என்றும் அவர் குறிப்பிட்டார்.

இச்சமர் குறித்த உண்மை விவரங்கள் அனேகமாக இன்று வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதேவேளை —

ஆனையிறவில் உள்ள படையினருக்கு மேலதிக உதவிகளை வழங்குவதற்காக சுமார் 500க்கும் மேற்பட்ட படையினரை ஏற்றிக் கொண்டு கப்பல் ஒன்று திருகோணமலையில் இருந்து நேற்று வடக்கு நோக்கிப் புறப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. (உ-5-6)


## ஷண்ணின்

வீடியோ CD
வெளியீடு!

பிரபுவின்

திருப்பதி
ஏழுமலை
வெங்கடேசா

பிரதிகளை
இப்பொழுதே பெறலாம்.

★ பிரதிகள் 300/- மட்டுமே.

ஏமாற்றம் இல்லாமல் என்றும் பிரதிகளை வழங்குகின்றோம்.

இது ஷண் ஸ்ரைல்

(71735)


## பருவமடையாத

# இளைஞனைக் கடத்தியதாக இளம்பெண் மீது குற்றச்சாட்டு

## வடமராட்சியில் விசித்திர வழக்கு

பருவமடையாத இளைஞனைக் கடத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்ட இளம் பெண்ணை 10 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதித்த பருத்தித்துறை நீதிமன்றம் சம்பந்தப்பட்டஇளைஞனை இரு வார காலம் விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டது.

கன்பொல்லை இராசகிராமத்தைச் சேர்ந்த 17 வயது இளைஞன் ஒருவனை அதே இடத்தைச் சேர்ந்த 24 வயதுப் பெண் ஒருத்தி கடந்த மாதம் கடத்திச் சென்றதாக சம்பந்தப்பட்ட இளைஞனின் பெற்றோர் நெல்லியடிப் பொலீஸில் முறைப்பாடு செய்ததாகவும் —

அதனையடுத்து சம்பந்தப்பட்ட இருவரையும் கைது செய்த பொலீஸார் அவர்களை அண்மையில் நீதிமன்றத்தின் முன் ஆஜர் செய்த போது பதில் நீதிவான் அ. க. நடராஜா மேற்படிஉத்தரவைப் பிறப்பித்ததாகவும் — தெரிவிக்கப்பட்டது. (உ-10)

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்)

பதற்கு படையினரும் விடுதலைப் புலிகளும் இணங்க வேண்டும்.

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள மக்கள் பெரும் கஷ்டங்களுக்கு உள்ளாகி வருகின்றனர் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

## தனங்கிளப்பு..

(முதலாம் பக்கத் தொடர்)

இதேசமயம்—

நேற்று வலிகாமம் பகுதியிலிருந்து பூநகரிப் பகுதியை நோக்கி படையினர் பலத்த பீரங்கித் தாக்குதலை அவ்வப்போது நடத்தினர். இந்த ஆட்லறிகள் ஏவப்பட்ட போது ஏற்பட்ட வெடிப்பொலியால் குடாநாடு அதிர்ந்தது.

இதேவேளை—

நேற்று அதிகாலை 4.30 மணி முதல் நேரமாக சுமார் ஒரு மணி கிளாலிப் பகுதியில் ஹெலிகள் தரை இறங்கிச் சென்றதைக் காண முடிந்தது நேற்றிரவும் ஹெலிகள் பல தடவை பறந்து திரிந்தன. (உ-6-5-117)

## மக்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

இந்த அறிவித்தலில் குறிப்பாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதற்கிடையில் —

கோயிலாக்கண்டி, தனங்கிளப்பு போன்ற இடங்களிலுள்ள மக்களை வெளியேறுமாறு புலிகள் பிரசாரம் செய்வதாக வெளியான செய்திகளில் எவ்வித உண்மைகளும் இல்லை என்றும்—

எனவே அந்தப் பகுதி மக்கள் வெளியேறத் தேவையில்லை என்றும்—

நேற்றிரவு பலாலி ஒலிபரப்பு நிலையத்தின் விசேட அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டது. (உ-5-6)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம் டிசெ 1

நாவாந்துறை சென். நிக்கலஸ் சனசமூக நிலயத்தின் 50 ஆண்டுஆவது நிறைவை முன்னிட்டு, சென் நிக்கலஸ் விளையாட்டுக் கழகம். அதன் மைதானத்தில் நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், இன்று மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் சென்.மேரிஸ் வி. க. அணியை எதிர்த்து பாடும்மீன் வி. க. அணி மோதும். (உ-8)

# புனரமைப்பு

வலிகாமம் தெற்கு, டிசெ. 12

சங்கானை - வல்லை வீதியில் இருந்து அளவெட்டி கொட்டுப்பனை மயானத்துக்குச் செல்லும் பெரிய மதவடி மேற்கு வீதியினை அளவெட்டி மேற்கு முற்போக்கு வாலிபர் சனசமூக நிலையத்தினர் பொதுமக்களினதும், வலிகாமம் வடக்கு பிரதேச சபையினரதும் ஒத்துழைப்புடன் சிரமதானப்பணி மூலம் செப்பனிட்டு தார் ஊற்றி புனரமைப்புச் செய்துள்ளார்கள்.

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்)

கப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை மீன் பிடிக்கச் சென்ற சமயம் தமது படகில் இரு வெற்றுக் கொள்கலன்களை மேலதிகமாக கொண்டு சென்றதாகத் தெரிவித்து நான்கு மீனவர்களும் —

கடந்த வெள்ளிக்கிழமை மீன்பிடிப் படகில் அதிக மீனவர்கள் ஏறிச் சென்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஒன்பது பேரும்—

கைது செய்யப்பட்டனர். (உ-5-164)

# கட்டுநாயக்காவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

ஊழியர்கள் எடுத்த முயற்சி காரணமாக பேரனர்த்தம் தவிர்க்கப்பட்டது.

விமான நிலைய கட்டுப்பாட்டு அறை ஊழியர்கள் தாய்லாந்து விமானத்துடன் அவசரமாகத் தொடர்பு கொண்டு அந்த விமானம் தரையிறங்காமல் செய்ததை அடுத்து விபத்து தவிர்க்கப்பட்டது. [உ-6]


On Your Mark .........
ஆயத்தம் .........
Set ... .....
ஆரம்பம் .........

மலிவு விற்பனை
15-12-1999 புதன்கிழமை முதல்

தரமான விளையாட்டு உபகரணங்களை வாங்குவதற்கு......

அருண்ஸ்
ஸ்போர்ட்ஸ் ஸ்பொட்
347, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி/10187)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12-12-1999 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org